SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue:5, Pages:56
December-2022, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

டிசம்பர் 2022,
விலை ரூ.20/-



## மார்கழி மாதப்பிறப்பு
## 16-12-2022

**ஐதராபாத்தில் 11-10-2022 முதல் 15-10-2022 வரை நடைபெற்ற ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி வைபவோத்ஸவத் திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் தெலுங்கானா மாநில மேதகு ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர் பங்கு கொண்டனர்**














*ஸங்கரோ நரகாயைவ*
*குலக்$_4$நாநாம் குலஸ்ய ச |*
*பதந்தி பிதரோ ஹ்யேஷாம்*
*லுப்தபிண்டோ$_3$த$_3$கக்ரியா: ||*

**வர்ணக்கலப்பு, குலநாசம் செய்தவர்களையும், குலத்தையும் நரகத்திற்கே அழைத்துச் செல்லக் கூடியது. இவர்களுடைய முன்னோர்கள் கூட பிண்டம், நீர்க்கடன் அதாவது சிராத்தம், தர்ப்பணம் – இவற்றை இழந்து வீழ்ச்சி அடைவார்கள்**


*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–42*

*கோத$_3$ண்டே$_3$ ஜ்யேஷ்ட$_2$நக்ஷத்ரே*
*மண்ட$_3$ங்கு$_3$டி$_3$புரோத்$_3$ப$_4$வம் |*
*சோளோர்வ்யாம் வநமாலாம்சம்*
*ப$_4$க்தபத்$_3$ரேணுமாச்ரயே ||*



**சோழ தேசத்தில் மண்டங்குடி எனும் நகரில் மார்கழி மாதத்தில் கேட்டை நக்ஷத்திரத்தில் "வைஜயந்தி" எனும் வனமாலையின் அம்சமாக அவதரித்த தொண்டரடிப்பொடியாழ்வாரை ஆச்ரயிக்கிறேன்.**

- குருபரம்பராப்ரபாவம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!**
**தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"**
**சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!**

**உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்**
**மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்**

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி

**சமய மாத இதழ்**

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)



## .....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

இவ்விலைமாற்றம் செப்டம்பர் 2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
இவ்விலை மாற்றம் புதிதாகக்கட்டும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

டிசம்பர் 2022

மலர் 02 இதழ் 05





*சிறப்பு ஆசிரியர் :*
**திரு.** A.V. **தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்



## உள்ளுறை

பக்கம்


கீதோபதேசம் -திரு. பத்ரி, திருவள்ளூர். 7
திருமகள் சேர் மார்பன் 9
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.
ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : ஜாதரோஷன் 12
- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.
திருப்பாவையில் இசைமழை - திருமதி மைதிலி, சென்னை. 14
ஆஞ்சநேயரின் பேரருளைப் பெறும் எளிய வழிகள் 18
- செல்வி எம். ஏ. நிவேதா, திருச்சி.
திருக்கார்த்திகை தீபச் சிறப்புகள் 20
- முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை.
பண் இசையால் பெருமாளை மயக்கியவர் 23
- திரு. நா. சிவராமன், உள்ளகரம்.
தி.தி.தேவஸ்தான நன்கொடை திட்டங்கள் 31
- திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி.
108 திவ்வியதேச வைபவம் – திருவித்துவக்கோடு 36
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.
அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 40
அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: 42
கிருபாசாரியார் - திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.
நான் கண்டு கொண்டேன்! - திரு. டி.டி. வரதராஜன், சென்னை. 44
ராசிபலன்கள் :டிசம்பர் 2022 46
- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.
நீதிக்கதைகள் : தூய பக்தி 47
- திரு. எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.
சித்திரக்கதை : திருப்பாவை ஜீயர் 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : கோதை அலங்காரத்தில் கோவிந்தன், திருமலை.
பின்னட்டை : பார்த்தசாரதி கோலத்தில் திருமலையப்ப ஸ்வாமி.



## உங்களுடன்...

# கீதையும் பாவையும்



ஸ்ரீமந்நாராயணன் பிரளய காலத்தில் உயிர்களைத் தன் வயிற்றில் வைத்து பாதுகாக்கின்றான். பின்னர் உலகைப் படைக்கும்போது உயிர்களையும் படைப்பிக்கின்றான். அவ்வாறு படைக்கப்பட்ட உயிர்களோ எம்பெருமானை தஞ்சம் அடையாமல் மாறி மாறி பல பிறவி எடுத்து வருகின்றன. மூப்பு, பிறப்பு, இறப்பு, பிணியைப் போக்கி பிறவாப் பேற்றினை அருளும் இறைவனை அவ்வுயிர்கள் அடைவதற்கான வழிகளும் பல உள்ளன. அவை கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகமாகும்.

இந்த கர்ம, ஞான, பக்தி யோகங்களால் வீடுபேறு அடைவது சாதாரண சம்சாரிகளுக்கு சாத்தியமாகாது. அது ரிஷிகளுக்கு மட்டுமே சாத்தியமாகும். சாதாரண சம்சாரிளுக்கும் இது கைகூட வேண்டுமெனில் அதற்கு சரணாகதி நெறி ஒன்றே சிறந்ததாகும். இந்த சரணாகதி நெறியானது கற்றவர், கல்லாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் போன்ற வேறுபாடின்றி அனைவராலும் பின்பற்றத் தக்கதாகும். அதாவது அப்பரமாத்மாவின் திருவடிகளில் முழுமையாக சரணமடைவதே “சரணாகதி” ஆகும். சம்சார பந்தத்தில் கட்டுண்டு வருந்தி தடுமாறும் யாவரும் இந்த சரணாகதியைப் பின்பற்றி முக்தி பெறலாம். தன்னைப் படைத்த பரம்பொருளிடம் முழுமையாகத் தன்னை ஒப்படைத்து சரணடைதல் பிறவிப்பயன் ஆகும்.

இச்சரணாகதி நெறியைத்தான் பகவான் கீதையில் சரமச்சுலோகமாகக் கூறுகின்றார். எவற்றையெல்லாம் கடைபிடித்தால் தன்னை அடைய முடியும் என்று கர்ம, ஞான, பக்தி யோகங்களை எல்லாம் கீதையில் காட்டி இறுதியில் *‘‘சர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ: அஹம் துவா சர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:’’* அதாவது அனைத்தையும் விடுத்து என்னை ஒருவனையே சரணடை. நான் உனக்கு முக்தி அளிக்கின்றேன் என்று கூறி சரணாகதி மார்க்கத்தை காட்டியிருக்கிறார் அல்லவா!.

இது குறித்தே பாவை பாடிய ஆண்டாளும் தன் திருப்பாவை பாசுரங்களில் எதை செய்தல் வேண்டும், எதை செய்தல் கூடாது என பலவற்றை எடுத்துச் சொல்லி இறுதியில் பரம்பொருளான கண்ணனைப் பற்றுவதே நோக்கமாக இருத்தல் வேண்டும் என்று *‘‘எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடுற்றோமே யாவோமுனக்கே நா மாட்செய்வோம்’’* அதாவது காலமுள்ளளவும், எவ்வளவு பிறவி எடுத்த போதிலும், உன்னோடு உறவு உடையவர்களாகக் கடவோம். உனக்கு மட்டுமே நாங்கள் அடிமை செய்யக் கடவோம் என்று எம்பெருமானிடம் சரணடைதலை குறிப்பிடுகிறாள்.

முக்கியமான வழியான சரணாகதியைத்தான் கீதை கூறுகின்றது. ஆண்டாளும், அந்த கிருஷ்ண பரமாத்மாவை அடைவதற்கான சரணாகதி மார்கத்தைத் தான் பாவையில் காட்டுகின்றாள்.

ஆக, கீதையும் சரி, பாவையும் சரி இரண்டுமே ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை பற்றுவதற்கான மோட்ச வழியினையே கூறுகின்றன. நாமும் இம்மாதத்தில் பகவானால் உபதேசிக்கப்பட்ட கீதையைப் பின்பற்றி ஆண்டாள் காட்டிய வழிமுறையில் மார்கழி நோன்பிருந்து பரம்பொருளான கண்ணனை சரணடைவோம்.



# கீதோபதேசம்

- திரு.பத்ரி, திருவள்ளூர்,
99946 55095.

கீதா சாஸ்திரத்தை வர்ணிப்பதற்கு ஆயிரம் தலை ஆதிசேஷனாலும் இயலாது. கீதையைக் குறித்து சிறிதளவே அறிந்திருப்பினும் போதும். அதில் திருப்தியடைந்து அதனையே தினமும் தியானிப்பதற்கு முயல வேண்டும். கீதை பாராயணத்தில் புண்ணியம், அனுஷ்டானம், மோக்ஷம் இவையெல்லாம் மனிதனுக்கு கிடைக்கும். பாராயணத்தில் மட்டுமே மகிழ்ந்து விடாமல் அதனை வாழ்க்கையில் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.

*"கீதா கங்கோதகம் பீத்வா புனர்ஜன்ம ந*
*வித்யதே"*

என்றவாறு கீதை என்னும் ஞானகங்கா தீர்த்தத்தினை அருந்தி பிறப்பு, இறப்பு என்னும் பந்தங்களை அறுத்து எறிதல் வேண்டும். இதுவே நமது கடமை. கீதை போன்ற நன்நூல்கள் கிடைப்பதுகூட எப்போதோ நாம் செய்த புண்ணியம் என்பதை முமுக்ஷுக்கள் அறிதல் வேண்டும். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் வாக்கான கீதையின் சேவை செய்யும்பேறு இப்பிறவியிலேயே அடைந்தவர் பெருமைக்குரியவர். அவ்வாறு அடைந்தவர் இந்தச் சரீரம் அழிவதற்கு முன்பாகவே (பராக் சரீர விமோக்ஷநாத்) அதன் இலக்கினை அடைய முயற்சி செய்ய வேண்டும். தீபம் எரியும் போதே வீட்டைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். மனித சரீரம் மறுபடியும் மறுபடியும் கிடைப்பது இல்லை.

*"சதகோடி ஜன்ம ஸுக்ருதைஹ் புண்யைஹ் வினா லப்யதே"* என்ற வாக்கியப்படி எத்தனையோ முற்பிறவிகளின் நற்செயல்களால் இத்தகைய அறிவு பூர்வமான பிறவி கிடைக்கிறது. அப்படி என்றால் தான் மட்டும் கீதையைப் படித்தால் போதுமா? என்றால் போதாது, தானும் படித்து பிறரையும் படிக்கச் செய்தல் வேண்டும். இதுவே ஞானயாகம். அனைத்து யாகங்களைவிட ஞானயாகம் சாலச் சிறந்தது என்று பகவான் கீதையில் தெரிவித்து உள்ளார்.

*"ச்ரேயான் த்ரவ்யமயாத் யஜ்ஞாஜ்*
*ஜ்ஞானயக்ஞ: பரந்தப*
*சர்வம் கர்மாகிலம் பார்த ஞானே*
*பரிசமாப்யதே"*

எல்லா தானங்களையும் விட ஞானதானம் மிகவும் உயர்ந்தது என்று சாஸ்திரங்களும் ஒரே மாதிரியாகக் கூறுகின்றன.

*''வார்யன்ன கோமஹீவாஸ ஸ்தில காஞ்சன சர்பிஷாம்''*
*சர்வேஷாமேவ தானானாம் ஞானதானம் ஷிச்யதே''*

ஜலதானம், அன்னதானம், கோதானம், பூதானம், நிவாசதானம், சுவர்ண தானம், நெய் தானம் முதலான தானங்கள் அனைத்திலும் ஞான தானம் சிறந்தது. எனவே கீதையைத் தானும் படிப்பதுடன் இயன்றளவு பிரச்சாரம் கூடச் செய்தல் வேண்டும். இவ்வாறாக கீதையைப் பரப்புவதற்கு முயல்பவன் எனக்கு மிகவும் பிரியமானவன் என்று ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் தெரிவிக்கிறார். இதனால் கீதாப்பிரசாரம் செய்வது அவருக்கு மிகவும் உகந்தது என்பது தெரிகின்றது.

*யத்ர யோகேஸ்வர: க்ருஷ்ணோ யத்ர பார்தோ தநுர்தர:*
*தத்ர ஸ்ரீர் விஜயோ பூதிர் த்ருவா நீதிர்மதிர் மம.*

# ஒளியாய் எங்கும் இருப்பவரே!



பாடி பஜனை செய்து வந்தோம்!
பக்தர் எங்களைக் காத்தருள்வாய்!
நாடி உன்னை தரிசிக்க
நன்றாய் வாழ்க்கை செழித்திடுமே!

தேடி நீயும் வந்திடுவாய்
தேனாய் இனிக்கும் வாழ்வளிப்பாய்
ஓடி வந்தோம் திருமலைக்கே
ஒளியாய் எங்கும் இருப்பவரே!

வலமாய் சுற்றும் உலகினிலே
வந்த இன்ப துன்பங்கள்
நலமாய் மாற்றி அருள் புரிவாய்
நம்பி உன்னை சரணடைந்தோம்!

பலரும் போற்றும் பெருமாளே!
பக்தர் குறையைப் போக்கிடுவாய்!
உலவும் காற்றில் இருக்கின்றாய்
உயிரை நீயே காக்கின்றாய்!

திங்கள் ஒளியாய் இருக்கின்றாய்!
திரும்பும் திசையில் உன் முகமே
தங்கக் கோபுர அழகினையே
கண்ட கண்கள் புண்ணியமே!

எங்கள் பெருமாள் இவரென்றே
இனிய நாமம் பாடிடுவோம்!
பொங்கும் இன்பம் நம் வாழ்வில்
புதிய வளர்ச்சி மலர்ந்திடுமே!

பாவலர் வ. பழனி, குயவர்பாளையம், புதுச்சேரி



# திருமகள் சேர் மார்பன்

- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி.



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

திருவாய்மொழியின் பலநூறுப் பாசுரங்களும் எம்பெருமானின் குணங்களையும் சிறப்புகளையும் பல படியாகப் பேசுவதாக இருந்தாலும் அவை அனைத்தும் பிராட்டியின் பெருமையோடு இணைந்து ஒளி பெறும். பெருமானின் பெருமையைக் காட்டுவது என்பது வைணவ உரையாசிரியர்களின் அபிப்பிராயம்.

பகவானை நொடி நேரமும் விட்டுப் பிரியாமல் சந்தோஷத்தை உண்டு பண்ணுவதும் சேதனர்களுக்கு புருஷகாரமாக விளங்குவதும் பிராட்டியின் இயல்பு.

காரணம், திருமந்திரத்தை விடவும், சரம சுலோகத்தை விடவும், இடையில் இருக்கக் கூடிய துவய மந்திரம் பல்வேறு கோணங்களில் மிகவும் சிறப்பானது என்பதை வைணவ ரகசிய நூல்கள் பறைசாற்றும்.

இந்த விஷயத்தைத்தான் திருவேங்கடப் பாசுரத்தில் அகலகில்லேன் இறையும் என்று இருக்கும் அலர்மேல் மங்கையை முன்னிட்டு, புகல் ஒன்றுமில்லாத அடியேன் உன் அடிக்கீழ் புகுந்தேன் என்று சரணாகதி செய்கிறார் சுவாமி நம்மாழ்வார்.

வேதம் பிரதிபலிக்கும் துவய மந்திர விளக்கத்தை சிந்தாமல் சிதறாமல் சொல்வதால்தான் திருவாய்மொழியை "யாழின் இசை வேதத்து இயல்" என்று, ***"சகஸ்ரசாகோ உபநிஷத் சமாகமம்"***, ***"திராவிட வேத சாகரம்"*** என்றும் வைணவ ஆசாரியர்கள் கொண்டாடினார்கள்.

கிருஷ்ண யஜுர் வேதம், காடகம், சர்வேஸ்வரனான ஸ்ரீமந்நாராயணனுக்கு சர்வேஸ்வரத்துவமே பிராட்டியால் தான் என்று கூறுகிறது.

எல்லா உலகங்களுக்கும் அவள் தாய் என்பதால்

***"த்வாம் திரைலோக்ய குடும்பினிம்"***

என்று ஸ்ரீ லட்சுமி ஸ்தோத்திரம் முழங்குகிறது.

பிராட்டியின் பெருமையைச் சொல்லும் நம்மாழ்வார் பாசுரம் ஒன்று.

***மாரி மாறாத தண்ணம்மலை வேங்கடத் தண்ணலை,***
***வாரி மாறாத பைம்பூம் பொழில்சூழ் குருகூர்நகர்,***
***காரி மாறன் சடகோபன் சொல்லாயிரத் திப்பத்தால்,***
***வேரி மாறாத பூமே விருப்பாள் வினைதீர்க்குமே.***

இத்திருவாய்மொழியில் கற்பாருடைய தீவினைகளையெல்லாம் பெரிய பிராட்டியார்



*''வேரிமாறாதபூமேலிருப்பாள் வினைதீர்க்கும்''*

என்கையாலே பிராட்டி நம்மை எம்பெருமான் அங்கீகரிப்பதற்கு இடையூறாக இருக்கும் தீவினைகளைப் புருஷ காரத்தாலே போக்கு கிறாள்.

தீர்த்தருளக்கூடுமென்று பயனுரைத்துத் தலைக் கட்டுகிறார்.

எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் அருள் தருவதில் உள்ள வேறுபாடுகளைக் குறித்து நம்முடைய ஆசாரியர்கள் அழகாகச் சொல்லி இருக்கிறார்கள்.

ஒருவன் செய்த வினைகளுக்கு பலன் கொடுப்பதில் எம்பெருமானுக்கு அதிகாரம் உள்ளது. நற்செயல் களைச் செய்து அவன் நல்லருள் செய்கின்ற வேலையில் அதனை அதிகப்படுத்தி தரும் ஒரு சகாயத்தை பிராட்டி செய்கிறாள்.

அதேநேரம் சேதனன் செய்த தீவினைகளைக் கண்டு சினந்து எம்பெருமான் தண்டிக்க முற்படும் பொழுது அந்த சீற்றத்தைத் தணிப்பதில் தனிக் கவனம் செலுத்தி சேதனனைக் காப்பாற்றுகிறாள்.

எனவே, இரண்டு வழிகளிலும் பிராட்டியின் தகவுரை ஒரு சேதனனுக்குத் தேவைப்படுகிறது.

*''திருமகளார் தனிக்கேள்வன் பெருமை உடைய பிரானார் இருமை வினை கடிவாரே''* என்று, அவன் வாமன அவதாரம் எடுத்து மகாபலியிடம் மூன்றடி மண் இரப்பதற்குச் சென்றபோதுகூட, பிராட்டி அவன் மார்பை விட்டு அகலவில்லையாம்.

அதனால் அவளை மான் தோலால் மறைத்துக் கொண்டு எம்பெருமான் சென்றான் என்பர்.

இன்னொரு பாசுரம்

*ஞாலத் தூடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும்,*
*சாலப் பலநாள் உகந்தோ றுயிர்கள் காப்பானே!*
*கோலத் திருமா மகளோ டுன்னைக் கூடாதே,*
*சாலப் பலநாள் அடியேன் இன்னம் தளர்வேனோ?*

இந்த பாசுரத்தின் கடைசி இரண்டு வரிகளைப் பாருங்கள்.

தன்னுடைய தளர்ச்சிக்கு நம்மாழ்வார் காரணத்தைக் கூறுகின்றார்.

பெருமானைச் சேராமல் இருப்பதால் தளர்ச்சியோடு இருக்கிறேன் என்று சொல்ல வந்த நம்மாழ்வார் அழகான திருமாமகளோடு உள்ள சேர்த்தியில் உன்னைக் கூடாததால் அடியேன் பெற்றது இந்தத் தளர்ச்சி என்கிறார்.

பிராட்டியோடு சேர்ந்த சேர்த்திதான் நமக்கு மிகப் பெரிய பலத்தைத் தரும்.

அதனால்தான் பெருமாள் தனியாக இருந்தாலும் பிராட்டி மார்பில் இருக்கிறாள். பிராட்டியின் தனிச்சன்னதியில் பெருமானும் மார்பில் மணியாரத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

இன்னொரு அற்புதமான பாசுரம்

*கண்டுகேட் டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி*
*கண்டவின்பம், தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்,*
*ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப,*
*கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேனுன் திருவடியே.*

*''வைகுண்டேது பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: இ ஆஸ்தே விஷ்ணுர சிந்த்யாத்மா''* என்கிறபடியே திருமகளுடன் தனி அரசாய் உறைகின்ற இருப்பை எம்பெருமான் ஆழ்வார்க்குக் காட்டிக் கொடுத்தருளினான்.

இதனை நம்மாழ்வார் *''ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப கண்ட சதிர் கண்டு''* என்கிறார்.



நம்மாழ்வார் திருமகளோடு கூடிய சர்வேஸ்வரனை நாம் நாள்தோறும் வணங்க வேண்டும். அப்படி வணங்கினால் நம்முடைய வினைகள் அனைத்தும் தீயினில் பட்ட தூசாகி விடும் என்று உபதேசம் செய்கின்றார் அப்பாசுரம் இது.

*நாளு நின்றடு நமபழ மையங் கொடுவினையுடனே*
*மாளும், ஓர் குறைவில்லை மனனக மலமறக் கழுவி,*
*நாளும் நம் திருவுடை யடிகள்தம் நலங் கழல் வணங்கி,*
*மாளுமோ ரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே.*

இதற்கு அழகான ஒரு ஐதீகம் உண்டு. "ஸர்வேச்வரனை ஆச்ரயித்தானாகில் அவன் பலப்ரதனாகிறான், பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டுகிறதென்? என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்கிறார்.

"இப்பாசுரத்தின் மூன்றாம் வரிதான் உம் சந்தேகத்தை நிவர்த்திக்கும். நாளும் நம் திருவுடை அடிகள் தம் நலங்கழல் வணங்கி என்று சாதித்த ஆழ்வார் திருவுள்ளத்தைக் கவனிக்க வேண்டும். அவனை ஆச்ரயிக்குமிடத்தில் இவன் குற்றம் பாராதே தன்னிழலிலே இவனை வைத்து அவன் பக்கல் முகம் பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்குமவள் முன்னாகப் பற்றவேணும் என்பதால் அவ்வாறு அருளிச்செய்தார்" என்பது நஞ்சீயர் பதில்.

*"மாளுமோரிடத்திலும் வணக்கொடு மாள்வதுவலமே"* என்கிற வரி அற்புதம்.

தொடி என்று கைவளைக்குப்பெயர்; ஒளிபொருந்திய கைவளைகளை உடையவள் என்று பிராட்டிக்கு இந்த அடைமொழி கொடுத்ததனால் நொடி நேரமும் பெருமானை விட்டுப் பிரியாதவள் பிராட்டி என்பது பெறப்படும்.



இராவணன் *"த்விதா பஜ்யேமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்"* என்றான்;

"நான் உடல் பிளந்து செத்துப் போகும்படி நேர்ந்தாலும் சரீரம் இரு துண்டாகப் பிளவுற்றுக் குறுக்கே விழுமத்தனையொழிய அப்போதும் ஒருவனை வணங்கினாப்போல் விழமாட்டேன்" என்றான்.

அப்படி இல்லாமல், சாகிறபோதாவது தலை கவிழ்ந்து சாவப்பெற்றால் நன்று என்கிறார் ஆழ்வார்.

நம்மாழ்வார் அருளிய பாசுரங்களின் அர்த்தபாவத்தை உணர்ந்து கொண்டு, அலர்மேல்மங்கைத் தாயார் திருவடிகளை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானைச் சரணடைவோம்.



# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

16

# ஜாதரோஷன்

- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,
சென்னை.

**எவருக்குக் கோபம் வந்தால் தேவர்களும் நடுங்குவார்களோ அவனே இராமன்.**

**கோபத்தை வென்றவனான அவன் (ஜிதக்ரோத:)**

**கோபப்பட நேரிடில் (ஜாதரோஷ:) அதுவும் நன்மையில்தான் முடியும்.**

**அடியவரிடம் அபசாரப்பட்டால் பொறுக்கவியலாது பொங்கும் சினம்!**

இராமனுக்கும் இராவணனுக்கும் பெரும் போர் நடந்தது. இராவணன் இராமன் மேல் அம்பு மழை பொழிந்தாலும் இராமன் கோபம் கொள்ளாமல் விளையாட்டாகப் போர் புரிந்தான். இராமனைக் கோபமடைய வைக்க எண்ணிய இராவணன், ஹனுமான் மேல் அம்புகளை எய்தான். இன்னும் ஒரு அம்புப்பட்டால் ஹனுமானுக்கு ஆபத்து எனும் நிலையில் இராமன் கடுங்கோபம் கொண்டு சக்கரமாகச் சுழன்று அம்பு மழைப்பொழிந்து இராவணனை வீழ்த்தினான். அன்றுதான் இராமனின் வீரத்தையும் கோபத்தையும் உலகம் உணர்ந்தது. அடியார்களை ரக்ஷிப்பதற்காகப் படும் கோபம் கோபமாகாது; மாறாக அதுவே பக்தர்களுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தரும் மாபெரும் குணமாகிறது.

பக்தன் பிரகலாதனிடம் இரண்யகசிபு பட்ட அபசாரத்தைப் பொறுக்காத பெருமான் நரசிங்கமாக அவதரிக்க, தேவர்களும் அவன் அருகில் செல்ல இயலாது பயந்து நடுங்கினர். அர்ஜுனனை பீஷ்மர் அடித்ததைப் பொறுக்க முடியாத கண்ணன்



## கருத்து

நாம் கோபப்பட்டால் உள்ளம் கொதிக்கும். இராமன் கோபப்பட்டாலோ அதனால் ரக்ஷிக்கப்பெற்ற பக்தர்கள் குளிர்வார்கள். இறைவனது சீற்றமும் ஒரு வகையில் அருளே! எனினும், "சீறி அருளாதே, இறைவா! நீ தாராய் பறை" (தொண்டு) என்று ஆண்டாளைப்போல் நாமும் இறைஞ்சுவோம் இறைவன் இராமனை!

தன் சபதத்தையும் மீறி ஆயுதம் எடுத்தான். வராக புராணத்தில் பெருமான் பூமா தேவியிடம் “தேவி! என்னிடம் எத்தனை அபசாரப்பட்டாலும் பொறுத்துக் கொள்வேன். என் பக்தனிடம் சிறிது அபசாரப் பட்டாலும் பொறுக்கவே மாட் டேன்” என்றார்.

இறைவனுடைய சினம் என்பது அடியவர்களுக்குப் பேரருளே!

**சாது மிரண்டால் காடு கொள்ளாது**

இராவணன் சீதையை அப ஹரித்துப் போனான். பல நாட்கள் தேடியும் அவள் கிடைக்காதபடியாலும், சீதையின் பிரிவும் நினைவும் வாட்டியபடியாலும், இராமன் அரக்கர்கள் மேல் கோபம் கொண்டான்.



அப்போது இலகுவனிடம் கூறினான் “இன்று பொழுது சாய்வதற்குள் சிரிப்பு மாறாத முகத்தோடு சீதையைக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைக்காவிடில், மலைக ளோடும் நதிகளோடும் கூடிய இவ்வுலகையே என் வில்லால் தலைகீழாகப் புரட்டுவேன்'' என்று சபதமிட்டான்.

இராமனின் சினத்தைக் கண்டு தேவர்களும் நடுநடுங் கினர். பின் லக்ஷ்மணன் ஆறுதல் வார்த்தை கூறி இராமனை அமைதியுறச் செய் தான்.

காரணம் இல்லாமல் எப்போதும் கோபத்தோடு இருந்தால் மதிப்பில்லை. ஒரு சாது காரணத்தோடு பிறருக்காக எப்போதாவது கோபம் கொண்டால் மதிக்கப்படுவான்.

*முற்றும்....*



## காரேய் கருணை இராமாநுஜர்

கோபமும் அருளும் கலந்திருப்பவன் இராமன். கோபத்தை விலக்கி இராமனை அருள வைக்கும் கருணை உள்ளவள் சீதாப்பிராட்டி. இணைபிரியா இவ்விருவரையும் ஒருசேர நமக்கு நல்கியருளுபவர் “காரேய் கருணை இராமாநுஜர்”. எனவே ஸ்ரீராமனின் அநுஜனான (தம்பியான) லக்ஷ்மணனின் திருப்பெயரையும், கைங்கர்யச் செல்வத்தையும் தனதாகக் கொண்டு அவதரித்தவர் அன்றோ இவர்! “இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடி கொண்ட கோயில்'' எனத் திகழும் நம் இராமாநுஜர் திருவடிகளையே புகலாகப் பற்றி “ஸ்ரீராமனின் பாதையில்” நன்னடை பயிலுவோம்! நம் நன்னடத்தையால் சீதை மணாளனின் சீரருளுக்கு இலக்காவோம்!



# திருப்பாவையில் இசை மழை



### இசையும் இறையும்

இசை என்பது இசைக்கப்படுவது. இறைவனுடன் ஒன்றவைப்பது. இசை ஓர் அரிய தவமாகும். மனதை ஒருநிலைப்படுத்தி இறைக்கு அருகே கொண்டு செலுத்தக்கூடிய ஒரு பாதை உண்டு என்றால் அது இசை என்று அறுதியிட்டு உரைக்கலாம். யுகங்கள் தோறும் இறைவனை அடைய வேறு வேறு மார்க்கங்கள் இருந்துள்ளன. கலியுகத்தில் அதற்கான மார்க்கம் இசை மார்க்கம். இறைவன் இசை வடிவம் உடையவன். சங்கீத ரசிகன், கானலோலன், நாதோபாசனையை விரும்புபவன். ”இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது இறைவன் அருளாகும்” என்ற தொடர் இசையின் மாண்பினை இறையோடு விளக்கும். இசையும் இறையும் இணைய, வருவது ஆனந்தமே. அதனால்தான் பாரதியார், “பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட வேணும்” என்று பாடுவார்.

### கோதை நாயகி

திருவில்லிபுத்தூர் தனில் பெரியாழ்வார் கண்டெடுத்த பெரும் பேறாக அவதரித்த கோதை நாயகி ஆண்டாள். இளமைக் காலம் தொட்டே எம்பெருமான் கண்ணனிடத்துத் தீராக்காதலுற்று வளர்ந்தாள். எம்பெருமானை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கம். அதற்கானப் பயணத்திற்குக் கோதை யாம் ஆண்டாள் எடுத்துக் கொண்ட பாணம் இசை. இசை ஒன்றினால் மட்டுமே அவனைத் தன் வசப்படுத்த இயலும் என்பதைத் தெரிந்து பயணம் செய்து இறையால் ஆட்கொள்ளப்பட்டாள். அந்த இசைச் சுரங்கப் பேழையில் உள்ள திருப்பாவை அமிர்த மழையில் நனைந்து இறை இன்பம் காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

### ஆண்டாளின் தனித்துவம்

மனித மனம் அழகுணர்ச்சி உடையது. இனியதை விரும்பும். கலையாகப் பரிணமிப்பதை இரசிப்பது. அந்த வகையில் இசை கேட்பாரைப் பிணிக்கவல்லது. தாளம், பண், சொல், பொருள், பாடுவோர் குரல் ஆகிய அனைத்தும் பொருந்திய இசையை ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் நன்றாக எடுத்தாண்டுள்ளார். நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பாடல்கள் அனைத்தும் இன்னிசை மலிந்த இன்சுவைக் கனிகள் என்பதில் ஐயமில்லை. அவற்றுள் தேன் பெய்தாற் போலும் சுவையுடையது திருப்பாவை. காரணம், மற்ற ஆழ்வார்கள் தங்களை நாயகியாக பாவித்துக் கொண்டு பாட, ஆண்டாளுக்கு அந்தக் கவலையில்லை. அதனால் நோக்கம் எளிதாக, பாவை நோன்பாக மலர, கூட்டுப்

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில்**

**இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள் ளனர்.**

பிரார்த்தனை போல் இசையோடு இணைத்து இணைந்து இறையருள் காட்டினாள். பக்தி மார்க்கத்துடன் இசை மார்க்கத்தையும் சமுதாயத்தில் நிலைபெற வழிவகுத்த நங்கை கோதை.



## இசைப் பாதை

ஆண்டாள் வகுத்த பாதையில் கல்,முள் கிடையாது.

*"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி...."*

*"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்*
*உன்தன்னோடு உற்றோமே ஆவோம் உமக்கே*
*நாம் ஆட்செய்வோம்..."* என்று இறையைத் துதிப்பது எளிமை. விண்ணப்பம் செய்வதும் எளிமை. இதற்கான இராகத் தேர்வுகளும் அருமை. அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் அவர்களால் இராகங்கள் அமைக்கப்பட்டு, திருமதி எம். எல். வசந்த குமாரி அவர்களின் குரலில் கேட்கும்போது மனம் புத்துணர்ச்சி பெறுவதுடன் இறை சிந்தனையில் நம்மை மூழ்க வைப்பது திண்ணம். இப்படி திருப்பாவை இசைப்பனுவலாக விளங்குவதால் இன்று வரையும் இனியும் தொடர்ந்து நிற்கும் வாழ்விலக்கியமாயிற்று. பறை, முரசு, சங்கம் முதலான இசைக் கருவிகள் இதனுள் சொல்லப்படுகிறது.

*"நாராயணனே நமக்கே பறை*
*தருவான்"*
*"சங்கம் இருப்பார் போல் வந்து*
*தலைப் பெய்தோம்"*

என்பது போற்றிப் பாடல்

இறை வணக்கப் பாடல்களில் போற்றிப் பாடல் என்ற ஓர் அமைப்பு உண்டு. இவ்வகை, இசையின் நயத்தை மிகுத்துக் காட்டும்.

*"அன்றிவ் வுலக மளந்தாய்*
*அடிபோற்றி*
*சென்றங்கு தென்னிலங்கை*
*செற்றாய் திறல் போற்றி*
*பொன்றச் சகடம் உதைத்தாய்*
*புகழ்போற்றி*
*கன்று குணிலா எறிந்தாய்*
*கழல் போற்றி"*

என ஒவ்வோர் அடியின் ஈற்றுச்சொல் போற்றி என்று தொடர்ந்து வந்து பாடுவோர்க்கும் கேட்போர்க்கும் இன்பம் நல்கும். இதற்கான இராகம் சிந்து பைரவி. பெயருக்கு ஏற்றார் போல் தேன் சிந்துவ தொப்ப திகழும் பாசுரமிது.

### வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 77க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | க | ண் | டி | யூ | ர் | 2 வெ | | | 3 தி |
| | ம் | 4 க | ரு | ட | ன் | | | ள் | 5 வா | | ரு |
| ர் | ர | | | 6 ந | கு | ல | ன் | ளி | | | ச் |
| னூ | பு | 7 உ | த் | தி | ர | ம் | ன் | ய | ரி | 8 சூ | ச |
| ட | கா | 9 பெ | ரி | ய | ந | ம் | பி | ங் | | | ந் |
| ண் | ங் | ரி | 14 வி | 10 கா | | 11 ஜ | க் | கு | ம | லை | த |
| 12 தொ | ம | ய | ஸ் | ரி | 13 உ | றி | ய | டி | வி | ழா | வி |
| | லு | தி | வா | யா | ச | | | பெ | | | ரு |
| ர் | மே | ரு | மி | ர் | கு | | 15 நெ | ரு | ப் | பு | த் |
| யூ | லு | ம | த் | | ங் | 16 அ | ணி | மா | | | த |
| றை | 17 அ | ட | ர | | ரா | | 18 வெ | ள் | ளி | | ம் |
| 19 உ | | ல் | ர் | ம் | 20 ப | ட | ண் | ம | க | யா | 21 தி |

## 2023, ஜனவரி மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்

| | |
|---|---|
| 01-05 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 02 | வைகுண்ட ஏகாதசி. |
| 03 | ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி. |
| 06 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆருத்ரா தரிசனம். |
| 07-13 | ஸ்ரீஆண்டாள் நீராட்டோத்ஸவம். |
| 14 | போகிப்பண்டிகை |
| 15 | பொங்கல் பண்டிகை |
| 16 | கோதா பரிணயோத்ஸவம். |
| 21-30 | தேவுனிகடபா ஸ்ரீ லக்ஷ்மி வேங்கடேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 28 | இரத சப்தமி |
| 30-பிப்.05 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி தெப்போத்ஸவம். |

### உருக்காட்சி

உருக்காட்சி என்பது என்வென்றால் ஐம்புலன்கள் வழியாக அறிய வைப்பது. இத்துடன் நாதம் சேர்ந்தால் ஆன்மா இன்புறும். இசை வழி கட்புலம், செவிப்புலம் எனக் காட்சிகளை விரிவுபடுத்தி அறியவைப்பதில் ஆண்டாள் தலைசிறந்தவள்.

*"கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து*
*பேசின பேச்சரவம் கேட்டிலையோ..."*

என்று பைரவி ராகத்தில் பாடுங்கால் செவிப்புல உருக்காட்சி வந்து நிற்கும். கலிப்பாவிற்கு உரிய இராகம் பைரவி. மேலும் இஃதோர் ஆண் இராகம். கொச்சகக் கலிப்பாவில் இயற்றப்பட்ட இப்பாடலுக்கான கௌசிகம் பண்ணான பைரவியில் பொருத்தமுற அமைத்துள்ளமை மிக்க சிறப்பு. அதேபோல் கேட்புலக்காட்சி கண்முன் விரிவதை அறியாதார் யார்?

### பாடித் தொழுதெழு

ஓங்கி உலகளந்த உத்தமனைப்பாடும் முன் பாம்பணையில் துயில் கொள்ளும் பரந்தாமனைப் பாட விழைகிறாள். பாடித் துதிக்கையில் பரமன் அருள் கைகூடும் என்பதை ஆய்ச்சியர் பெருமக்கட்கு அறிவுறுத்தும் விதமாக அனைவருக்கும் உணர்த்தும் பாங்கை எப்படி எடுத்துரைக்க இயலும்?

*"வையத்து வாழ்வீர்காள்.....*
*பையத் துயின்ற பரமனடி பாடி..."*

அவனைப் பாடி சரணடைய வேண்டும். இவ்வையத்துள்ளோரே! சரணாகதி தத்துவத்தை அறிவீர்; பாடுவீர்; உய்வதற்கு வேறு வழியில்லை. இறையை இசையோடு அவன் புகழ்பாடி துதித்திடு என்று அழகாக இயம்பியுள்ளார். தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல் இசை மழை வெள்ளப் பெருக்கு திருப்பாவையுள் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளது. இசைக்கு, ஏற்ற இடங்களில் எல்லாம் முக்கியத்துவம் அளிக்க ஆண்டாள் மறக்கவில்லை.

### லீலா விநோதன்


மாயம் புரிவதில் வல்லவன். வடமதுரை மைந்தன். யமுனைத் துறைவன். ஆயர் குலத்து விளக்கு, யசோதையிடத்துக் கட்டுண்டு, வடுவுற்ற

### தியான சுலோகம்

யஸ்ச தேவாலயம் பக்த்யா
விஷ்ணோ: காரயிதி ஸ்வயம் |
ஸ ஸப்த புருஷான் லோகாந்
விஷ்ணோர் நயதி மாநவ: ||

ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ஆலயம் அமைத்து ஆகம விதி சொன்னபடி நல்ல முறையில் பூஜைகள் செய்வித்து வருபவனை தேவர்கள் வந்து ஆசீர்வாதம் செய்து விண்ணுலகம் அழைத்துச் செல்வர்கள்!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



தாமோதரன். இவனை மலர் கொண்டு அர்ச்சித்தால் போதுமா? வாயார அவன் புகழ் பாடி மனதால் சிந்தனையில் நிறுத்த அனைத்துத் தீவினையும் அகலும் என்று இசைப்பதன் முக்கியத்துவத்தை ஆண்டாள் எடுத்து மொழியும் அழகே அழகு.

*''வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க....''*

என்பதாகும் அவ்வரிகள்.

*''கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ''*என்று ஒரு தோழியைக் கோபித்துக் கொள்கிறாள். இசையும் இறையும் ஆண்டாளைப் பொறுத்த வரை வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அழுதால் அவனைப் பெறலாமே என்பதுபோல இசைத்தால் இறையைப் பெறலாம் என்பது ஆண்டாளின் குறிக்கோள். இப்படியாகத் திருப்பாவையில் இசை மழை வந்த வண்ணம் உள்ளது. உள்ளத்தை அதனுள் செலுத்தி, தெளிந்து, நன்குணர்ந்து இறை அருள் பெறுவோம்.


* * * * * * * *

**திருமதி மைதிலி,**
**சென்னை, 98843 47886**

* * * * * * * *



**மங்கள சுலோகங்கள்**



*யமுநாதீரவிஹார த்ருதகௌஸ்துபமணி ஹார ।*
*நாராயண நாராயண நாராயண நாராயண ஜய கோபாலஹரே ॥*

**யமுனை ஆற்றின் கரையினில் விளையாடுபவனே! கௌஸ்துப மணியுடன் கூடிய மாலையை உடையவனே! நாராயணனே! நாராயணனே! கோபால! ஹரி! (உனக்கு) வெற்றி!**

# கண்ணன் கருத்துரை



*ஸுஹ்ருன்மித்ரார்யுதாஸீனமத்யஸ்தத் வேஷ்யபந்துஷு:।*
*ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸ மபுத்திர்விசிஷ்யதே॥*

(6-9)

**நண்பர், தெரிந்தவர், பகைவர், அயலார், நடுநிலையாளர், வெறுக்கத்தக்கவர், உறவினர், சாதுக்கள், பெரும் பாவிகள் ஆகிய இவர்கள் அனைவரிடத்தும் சமமான மன நிலையில் எவர் இருக்கிறாரோ அவர் பெரிய சான்றோர் ஆவார்.**

தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.





# ஆஞ்சநேயரின் பேரருளைப் பெறும் எளிய வழிகள்

* * * * * * * *

**செல்வி எம். ஏ நிவேதா,**
**திருச்சி**

* * * * * * * *



ஆஞ்சநேயரை வணங்கும் அடியவர்கள் ஸ்ரீராம ஜெயம் கூறுவதன் மூலம் ஆஞ்சநேயரின் பேரருளை மிக எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம். சொல்லில் அடங்கா புகழவன்! சொல்லின் செல்வன்! அஞ்சனைப் புதல்வன்! சிவனின் அவதாரன்! அவன் அழகைக் காண கோடி கண்கள் வேண்டும்!! அவன் புகழ் பாடி வையகமே திரள வேண்டும்!! அனுமன் என்னும் நாமம் அனைத்திலும் தித்திக்கும் பாணம். வானுயர வளர்ந்தாலும் வானரன் தானுயரப் பார்ப்பதில்லை. "ராம" என்று ஒரு முறை உரைத்தால் போதும் கூனிக்குறுகி அணுவளவாய் மாறிடுவான்.

அனுமன் மார்கழி மாதம் மூலம் நட்சத்திரத்தில் அவதரித்தவர். அவர் பிறந்த நாளன்று காலையிலேயே எழுந்து சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும். ஏனெனில், அனுமனின் ஆசிரியர் சூரியன். அவரிடமே அனுமன் இலக்கணம் படித்து, சர்வ வியாகரண பண்டிதர் என்னும் பட்டம் பெற்றார். இவரது வழி பாட்டில் ராமநாம பஜனையும், செந்தூரப் பூச்சும், வெற்றிலை மாலையும் நிச்சயம் இடம் பெறும். இவரது சன்னதியிலும் துளசியே பிரதான பிரசாதம். அனுமன் அவதார நாளில் அருகில் உள்ள ஆஞ்சநேயர் தலத்திற்குச் சென்று அனுமன் காயத்ரி சொல்லி அவரது அருள்பெறலாம். செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் அனுமன் காயத்ரியை துதித்து அனுமனை வழிப்பட்டால் சகல தோஷங்களும் நீங்கி இன்னருள் பெறலாம்.



## ஸ்ரீஅனுமன் காயத்ரி

*"ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே*
*ராமதூதாய தீமஹி*
*தன்னோ அனுமன் பிரசோதயாத்"*

என்ற அனுமன் காயத்ரி மந்திரத்தைச் சொல்லி அவரது அருள்பெறலாம். அனுமனை வணங்குவதால் புத்தி, பலம், புகழ், குறிக்கோளை எட்டும் திறன், அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்புணர்வு, வாக்குவன்மை ஆகியவற்றைப் பெறலாம்.

திருமணத்தடை நீங்க அனுமனுக்கு வியாழன் அன்று வெற்றிலை மாலை, துவங்கிய வேலைகளில் தடை நீங்க வியாழன், சனிக்கிழமைகளில் எலுமிச்சை மற்றும் வடைமாலை சாத்தலாம். ராமதூதர் அனுமனுக்கு துளசி மாலை சாத்துவதால் ராம கடாட்சம் பெற்று நல்ல கல்வி, செல்வம் பெறலாம். அசோக வனத்தில் சீதையைக் கண்டு இராமபிரானின் நிலையை அனுமன் எடுத்துரைத்தார். சந்தோஷம் அடைந்த சீதை அனுமனை ஆசீர்வதிக்க எண்ணி அருகில் வளர்ந்திருந்த வெற்றிலையைக் கிள்ளி தலையில் தூவி ஆசிர்வதித்தாள்.

“இந்த இலை உனக்கு வெற்றியைத் தரட்டும்” என்றாள். வெற்றிலையைக் காரணமாக்கி ஆசீர் வதித்தமையால் பக்தர்கள் தங்கள் செயல்பாடுகள் வெற்றி பெற வெற்றிலை மாலை சாத்துகின்றனர்.

வெண்ணெய் வெண்மை நிறமுடையது. வெள்ளை உள்ளமுள்ள பக்தர்களை அனுமனே தன்னுடன் சேர்த்து அருள் செய்கிறான் என்பதன் அடையாளமாக வெண்ணெய் சாத்தப்படுகிறது.

அனுமனுக்குப் பிடித்த அர்ச்சனைப் பொருட்கள் வடை மாலை, வெற்றிலை மாலை, துளசி மாலை, சிந்தூரம், பசு நெய், பழங்கள். அனுமன் இன்றி ஸ்ரீராமன் இல்லை. ஸ்ரீராமன் இன்றி அனுமன் இல்லை!!!

*“ஓம் நமோ ஹனுமதே ருத்ர...”* எனத் தொடங்கும் இம்மந்திரத்தை ஒருவரது ஜன்ம நட்சத்திரத் தினத்தன்று காலையில் ஒரு அனுமனின் கோயிலில் ஏதாவது ஒன்றை மட்டும் சொல்லி அனுமனை வணங்கி ஆரம்பிக்க வேண்டும். அதன் பிறகு தினமும் காலையில் வீட்டிலிருந்தே சொல்லி அனுமனை வணங்கலாம். இந்த மந்திரங்களை எப்போதும் 48 அல்லது 108 தடவை சொல்லி வணங்குதல் முக்கிய அம்சமாகும்.

ஒருவரது ஜாதகத்தில் அவர்களின் லக்னம், லக்னாதிபதி, ராசி, ராசியாதிபதி, சூரியன், சந்திரன் ஆகியவை பாதிப்படைந்து அல்லது பலவீனமாக இருந்தால் அவருக்கு மற்றவர்களின் கண் திருஷ்டியால், எதிர்மறை சக்திகளால் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்.

குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை இன்றி மனம் அமைதி இல்லாமல் அலைப்புறும். இதே போல் ஒருவரின் ஜாதகத்தில் 6,8,12 ஆகிய இடங்கள் பலமாக இருந்து, கோச்சார நிலைகள் பாதகமாக இருந்தாலும் அவற்றின் திசா புத்தி காலங்களில் மேற்கண்ட பிரச்சினைகள் உண்டாகும்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல பலனைத்தரும் இந்த அனுமன் மந்திரங்கள்.



## கஷ்ட, நஷ்டங்களை போக்கும் அனுமன் மந்திரங்கள்

*“ஓம் நமோ ஹனுமதே ருத்ர*
*அவதாராய பர யந்த்ர மந்த்ர*
*தந்த்ர த்ராதக நாசகாய*
*ஸ்ரீ ராம தூதாய ஸ்வாஹா”*
*“புத்திர் பலம் யஸோ தைர்யம்*
*நிர்பயத்வமரோகதா அஜாத்யம்*
*வாக்படுத்வம் ச ஹநுமத்*
*ஸ்மரணாத் பவேத்”*

ஒருவருக்கு கண் திருஷ்டி அல்லது எதிர்மறை சக்திகளால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களைக் களைய அனுமன் மீது அமைந்த இரண்டு முக்கியமான மந்திரங்களை தினமும் சொல்லலாம்.

# திருக்கார்த்திகை தீபச்சிறப்புகள்!

நாடெங்கிலும் மகிழ்ந்து கொண்டாடப்படும் பெரிய திருவிழாவாக கார்த்திகை தீபம் விளங்குகின்றது. சங்ககாலம் முதலே, இவ்விழா, தமிழகத்தில் சிறப்புறக் கொண்டாடப் பெற்றதற்குப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் கிடைக்கின்றன.

### சோதியே சுடரே

சிவபெருமானைச் சோதியாய், சுடராய், சூழொளி விளக்காக வழிபடுவது தொன்மை மிக்க மரபாகும். ஒளிப்பிழம்பாக நிற்கும் இறைவனின் தன்மையை அறிவிப்பதற்காகத் திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறோம்.

### தொன்மை மிகுந்த கார்த்திகை தீபம்

திருஞானசம்பந்தர்,

*''வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்*
*துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகைநாள்*
*தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்*
*விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்''*

என்று பாடுவதால், கார்த்திகை தீப விழாவைப் பற்றியும் அதன் தொன்மை பற்றியும் அறிந்து கொள்ளலாம். முன்பு இவ்விழா, கார்த்திகை விளக்கீடு எனப் பெயர் பெற்றிருந்தது. இவ் விளக்கீட்டு விழாவினை – விழாவின் இயல்பினை அகநானூற்றில் நக்கீர தேவ நாயனாரின் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் பௌர்ணமியை ஒட்டி நிகழும் என்பதை *''மதி நிறைந்து அறுமீன் சேரும் அகல் இரு நடுநாள்''* என்னும் தொடரால் அறியலாம்.

### பெண்கள் ஏற்றும் விளக்கு வரிசை

தமிழ் நாட்டில் திருக்கார்த்திகைத் திருநாளில், பெண்கள் தத்தம் வீடுகளில், மாலை நேரத்தில் வரிசை வரிசையாக, அகல்விளக்கு களை ஏற்றி வைத்து, தேங்காய், வெற்றிலைப் பாக்கு, வாழைப்பழம் மற்றும் பலவகைக் கனிகள், அவல்பொரியில் வெல்லப்பாகு கலந்து செய்ததும், நெற்பொரியில் வெல்லப்பாகு கலந்து செய்ததும் ஆகிய பண்டங்களை வைத்து இறைவனுக்குப் படைத்து மகிழ்வார்கள். இதனைத்தான் "தையலார் கொண்டாடும் விளக்கீடு" என்று தேவார வரி உணர்த்தும்.



## கார்த்திகை விளக்கீடு மந்திரம்

திருக்கார்த்திகை திருநாளில், அனைவரும் வீட்டில் வரிசை வரிசையாக விளக்கேற்றி இறைவனை அதாவது முருகப் பெருமானை வழிபடுவார்கள். கார்த்திகை நாளில் தானே முருகப் பெருமான் அவதரித்தார். முருகனுக்கும் உகந்தது திருக்கார்த்திகை. இல்லங்களில் திருக்கார்த்திகை நாளில் விளக்கேற்றும் போது துதிக்க காஞ்சி மகாப் பெரியவர் அருளிய மந்திரம்.

*“கீடா: பதங்கா: மசகாச்ச வ்ருக்ஷா: ஜலேஸ்தலே யே நிவசந்தி ஜீவா:*
*த்ருஷ்ட்வா பிரதீபம் ந ச ஜன்ம பாஜா பவந்தி நித்யம் ச்வபசா ஹிவிப்ரா:”*

“புழு, பறவை, கொசு உள்ளிட்ட சகல ஜீவராசிகள், தாவரங்கள், மனிதர்களில் முதல் பிறவியிலிருந்து முக்திப் பிறவி வரையில் உள்ளவர்கள் என்று யார் யார் கண் பார்வையில் இவ்விளக்கொளி படுகிறதோ அவர்கள் இன்னொரு பிறவி என்கின்ற துன்பமும் இன்றி நித்யானந்தம் பெறட்டும்”.



## பூவும் விளக்கும்

ஔவையார் அகநானூற்றுப் பாடல் ஒன்றில், பெண்கள் திருக்கார்த்திகை நாளில் ஏற்றும் அகல் விளக்கு வரிசை, பாலை நிலத்தில் சிவந்த இலவ மரத்தின் பூக்களின் வரிசையோடு ஒத்திருந்தது என்று காட்டுகின்றார்.

## ஒளிவடிவான சிவன்

“தீப தரிசனம் பாவ விமோசனம்” என்பர். இறைவனை ஒளியாக, ஒளிகளுக்கெல்லாம் மூல காரணனாக இருப்பவன் சிவ பெருமானே என்று, மாணிக்கவாசகர் பாடுகிறார். *“சோதிய சுடரே சூழொளி விளக்கே”* என்பது திருவாசகம். “ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி” என்பதும் திருவாசகம். *“ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே! உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே”* என்பது திருவிசைப்பா.

## குன்றின் மேல் இட்ட விளக்கு

மேலும், சீவகசிந்தாமணி என்னும் பெருங் காப்பியத்தில், திருவண்ணாமலைக் கார்த்திகை தீபப் பெருவிழாவைப் பற்றிய சான்றும் உள்ளது. *“குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன”* என்பது அக்குறிப்பு. “மலை போன்ற மார்பில் வீரன் ஒருவன், செங்குவளை மலர்களால் கோக்கப்பட்ட மாலையை அணிந்திருந் தது, திருவண்ணாமலைக் குன்றின் மீது, கார்த்திகை யின்போது ஏற்றும் விளக்குகளைப் போன்றிருந்தது” என்பதனால் பிற சமய நூல்களும் இவ்விழாவைக் கவனித்துப் போற்றியுள்ளன என்பது, விளங்கும்.

## திருவண்ணாமலை மகாதீபம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாக சிவபெருமான் நின்ற நாளை, திருக் கார்த்திகைத் தீப நாளாக, ஒவ்வோராண்டும் அக்னி மயமான திருவண்ணாமலையில் தீபத்தைப் பெரிய கொப்பரையில் நெய்யூற்றித் தீபமேற்றி வழிபாடு செய்யும் வழக்கமாக மாறியது என்பது ஆன்றோர் நம்பிக்கை.

## பரணிதீபம்

கார்த்திகை மாதத்தில் திருவண்ணாமலையில் அருள்மிகு உண்ணாமுலை அம்மன் உடனாகிய அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் பத்து நாள் பிரம்மோத்ஸவமாகக் கொண்டாடப் பெறுகின்றது.

இவ்வுற்சவத்தின் பத்தாம் நாள் காலையில் – அதிகாலையில் கோயிலின் கொடி மரத்தின் அருகில் பரணி நட்சத்திரத்தில் 5 பெரிய மண் மடக்குகளில் நெய் நிறைய ஊற்றிப் பெரிய பெரிய திரிகள் போட்டு ஏற்றுவார்கள். இந்த ஐந்து தீபங்களும், சிவபெருமானின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைக் குறிக்கும்.

### மகாதீபம்

பஞ்சபூதத் திருத்தலங்களுள் திருவண்ணாமலை அக்னித் தலம் ஆகும். காலையில் பரணி தீபம், மாலையில் மலையுச்சியில் தீபம் ஏற்றப்படும். இத்தீபம் சிவ பெருமான் அக்னி பிழம்பாக நின்றார் என்ற வழக்கினைக் கொண்டு திருவண்ணாமலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்படுகிறது. இம்மலை 2668 அடி உயரம் ஆகும். மலையுச்சியில் தீபம் ஏற்றும் கொப்பரை செம்பினாலும் இரும்பாலும் செய்யப்பட்டது. இக்கொப்பரையை மலையுச்சிக்கு பலர் சேர்ந்து தூக்கிச் சென்று தீபம் ஏற்றுவர். இத்தீபத்திற்கு 3000 கிலோ நெய்யும், 1000 மீட்டர் காடாத் துணியும் பயன்படுத்துவார்கள்.

மகாதீபத் திருநாளிலிருந்து தொடர்ந்து 10 நாட்களுக்கு மேல் மலையைச் சுற்றி 10–15 கி.மீ. வரையிலும் தீபத்தை காண முடியும் என்கிறார்கள். மலையில் தீபம் ஏற்றும் முன்பாகப் பஞ்ச மூர்த்திகளும் வெள்ளி வாகனங்களில் வெளியே வருவர். இறுதியாக அர்த்த நாரீஸ்வரர் வெளியே, சிவ சக்தி ஐக்கியக் குறியீடாக, ஆவேசமாகப் பின்புறமாக வந்து, திடீரென மலையைப் பார்த்துத் திரும்பும்போதும், மகா தீபம் மலையுச்சியில் ஏற்றுவதற்கு வட்ட வடிவ தீப்பந்தங்களை உயர்த்துவர். எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடக்கும். கோயில் முழுவதும் ஜகத்ஜோதியாகப் பிரகாசிக்கும். பக்தர்கள் "அண்ணாமலைக்கு அரோகரா! அண்ணாமலைக்கு அரோகரா!!" என்று பக்தியோடு – பரவசத்தோடு முழங்குவார்கள். மாணிக்கவாசகர் திருவாசகத்தில்,

*"அண்ணாமலை எம் அண்ணா போற்றி!*
*கண்ணாரமுதக் கடலே போற்றி"*

எனப்பாடுவார்.



### சர்வாலயதீபம்

அண்ணாமலை தீபத்தன்றுதான் நாட்டில் அனைத்து சிவாலயங்களிலும் தீபம் ஏற்றப்படும். சிவன் தீப்பிழம்பாக நின்றதை உருவகப்படுத்திச் சொக்கப்பனை கொளுத்துவார்கள்.

திருக்கோயில்களின் எதிரில் ஒரு பனைமரத் துண்டை நட்டு, அதனைச் சுற்றிலும் காய்ந்த பனை ஓலைகளைக் கட்டிச் சின்ன மலை போல் செய் திருப்பர். உள்ளே நுழைய சிறு வழி இருக்கும். அதன் வழியே ஆலயக் குருக்கள் சென்று அகல்விளக்கு ஏற்றிப் பனங்கட்டையில் வைத்து பொரி, அவல், கடலை நைவேத்யம் செய்து, தீபாராதனை செய்வர். குருக்கள் வெளியே வந்ததும் அந்த சொக்கப் பனையை எரிப்பர். இளைஞர்கள் வெடிகளையும் மத்தாப்புகளையும் வைத்து மகிழ்வர்.

### திருவண்ணாமலையின் சிறப்பு

திருவாரூரில் பிறந்தால் முக்தி! காசியில் இறந்தால் முக்தி! திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி! என்பது சான்றோர் வாக்கு.

திருவண்ணாமலையில் பகவான் ஸ்ரீரமண மகரிஷி போல, மகான் சேஷாத்திரி சுவாமிகள் போல, வெளி நாட்டில் இருந்து, திருவண்ணாமலைக்கு வந்து, சிவ பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட யோகி ராம் சுரத்குமார் சுவாமிகள் போல இன்னும் எத்தனையோ ரிஷிகள் இன்னும் திருவண்ணாமலையில் வாழ்வதாக ஐதீகம். மாதந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் கிரிவலம் வந்து வழிபடும் புண்ணியத்தலம், திருவண்ணாமலை.

### முடிவுரை

*"ஞானத் தபோதனரை வா வென்று அழைக்கும் மலை திருவண்ணாமலை"* என்று பல்லோராலும் போற்றப்படும் திருவண்ணாமலையில் தீபத்திருநாள் நடப்பதுபோல, நாமும் அறிவாகிய விளக்கால், அறியாமை என்ற இருளைப் போக்கி உலகில் வாழ்வாங்கு வாழ்வோம்!

********

**முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை,**

**94445 82856.**

********

# பண் இசையால் பெருமாளை மயக்கியவர்

திரு. நா. சிவராமன், உள்ளகரம்,
9445231354

ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் எல்லாம் தனிச்சிறப்பு வாய்ந்தவை என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. "பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே" என்பார் குமரகுருபரர். அதாவது பெருமாள் ஆனவர் ஆழ்வார் பாசுரங்கள் பின்னே செல்கின்றாராம்.

பெருமாளிடம் ஆழ்ந்த பற்றுக் கொண்ட அடியார்களே "ஆழ்வார்" என்ற பெயரைப் பெறுகின்றனர். இப்பாடல்களில் நாம் கவனம் செலுத்தினால் நமது தேவையில்லாத பந்தங்கள் அகலும். பெருமாளிடம் பக்தி வரும். பன்னிரு ஆழ்வார்களும் பெருமாள் என்னும் மேகத்தைக் கொண்டு பாடல் மழை பொழிந்தார்கள். அதனால் வைணவம் என்னும் பயிர் செழித்து வளர்ந்தது என்பதும் உண்மை.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருப்பாணாழ்வார் பற்றி காண்போம்.

துர்மதி ஆண்டு கார்த்திகை மாதம் ரோஹிணி நட்சத்திரத்தில் திருப்பாணாழ்வார் அவதாரம் செய்தார். இவரை பாணர் குலத்தில் பிறந்த ஒருவர் கண்டெடுத்து வளர்த்தார். யாழ்ப் பாடல்களில் தேர்ச்சி பெற்ற இவர் "திருப்பாணர்" என்ற பெயரைப் பெற்றார். இவர் தினமும் காலையில் நீராடி, துளசி மாலையை அணிந்து கொண்டு, திருமண் இட்டுக் கொண்டு கையில் வீணையுடன் காவிரி ஆற்றின் கரையில் அமர்ந்துக் கொண்டு, திருஅரங்கன் குறித்துப் பாடல்களை மெய் மறந்து பாடிக் கொண்டு இருப்பார்.

அப்படி ஒரு சமயம் அவர் பெருமாளின் பாடல்களை பாடிக் கொண்டு இருந்த பொழுது, அரங்கனுக்கு நீராட்ட நீர் எடுக்க லோக சாரங்க முனிவர் என்பவர் காவிரிக்கு வந்தார். வழியில் பெருமாளின் ரூபத்தில் லயித்து இருந்த திருப்பாணாழ்வாரை தள்ளிப் போகச் சொன்னார்.

ஆனால், பெருமாளின் தரிசனத்தில் இருந்த திருப்பாணாழ்வார் இதனைக் கவனிக்கவில்லை. கோபம் அடைந்த லோகசாரங்கர் ஒரு கல்லை எடுத்து திருப்பாணாழ்வார் மேல் வீசினார். கல் ஆழ்வாரின் நெற்றியில் பட்டு இரத்தம் கொட்டியது. பயந்து போன ஆழ்வார் அவருக்கு வழிவிட்டார். நீர் எடுத்துக் கொண்டு சென்ற லோக சாரங்கர் சன்னதியிலுள்ள



பெருமாளின் நெற்றியில் இருந்து இரத்தம் வழிவதைக் கண்டு திடுக்கிட்டு விட்டார்.

அன்று இரவு உறக்கத்தில் இருந்த லோக சாரங்கர் கனவில் தோன்றினார் பெருமாள். "திருப்பாணாழ்வாரின் பக்தியை உணர அவரைக் கல்லால் அடித்தீர்! அந்தப் பாவம் நீங்க, அவரை உமது தோளில் தூக்கிக் கொண்டு நாளை எமது சன்னதிக்கு வருக..." என்றார்

விடிந்தது. லோக சாரங்கர் ஆழ்வாரிடம் வந்தார். மறுத்தார் அவர். பெருமாளின் ஆணை இது என்றார் சாரங்கர். பெருமாளை எண்ணி பாடல்கள் பாடத் தொடங்கினார் ஆழ்வார். அவரை தோளில் சுமந்து கொண்டு பெருமாளின் சன்னதிக்குச் சென்றார் லோகசாரங்கர். பெருமாளை கண் குளிரக் கண்ட திருப்பாணாழ்வார் பாடத் தொடங்கி விட்டார்.

உச்சி முதல் பாதம் வரை பெருமாளின் உடல் அழகை வர்ணிக்கத் தொடங்கி விட்டார் ஆழ்வார்.

*''அமலன் ஆதி பிரான் அடியார்க் கென்னை*
*ஆட்படுத்த*
*விமலன் விண்ணவர் கோன் விரை யார்*
*பொழில் வேங்கடவன்*



*நிமலன் நின் மலன் நீதி வானவன் நீள் மதிள்*
*அரங்கத்தம்மான் திருக்*
*கமல பாதம் வந்து என் கண்ணி னுள்ளன*
*ஒக்கின்றதே''*

உலகிற்கு மூல காரணமாக உள்ள இறைவன் என்னையும் ஆட்படுத்தினான். அவனுடைய ஒளி மிகுந்த திருவடிகள் தாமே வந்து, என் கண்ணுக்குள் புகுந்தன போன்றே உள்ளன என்கின்றார் ஆழ்வார்.

அடுத்து பீதாம்பர ஆடையின் அழகு வருகின்றது.

*''உவந்த உள்ளத்தனாய் உலகம் அளந்து*
*அண்டமுற*
*நிவந்த நீள் முடியன் அன்று நேர்ந்த*
*நிசாசரரைக்*
*கவர்ந்த வெங் கணைக் காகுத்தன் கடியார்*
*பொழில் அரங்கத் தம்மான் அரைச்*
*சிவந்த ஆடையின் மேல்*
*சென்றதாம் என் சிந்தனையே''*

பெருமாளின் சிவந்த பீதாம்பரம் மீது ஆழ்வாரின் உள்ளம் படிந்து விட்டது. பெருமாள் அறத்தை மறந்த மாவலியை அழித்தான். அடுத்து இராம பிரானாக பெருமாள் அவதாரம் எடுத்தது மட்டுமல்ல, அவனே திருவரங்கப் பெருமாளாக எழிற் கோலம் பூண்டு, பக்தர்களைக் காக்கின்றான் என்று கூறுகின்றார் ஆழ்வார்.

மூன்றாம் பாடலில் நாபிக் கமல அழகை வர்ணிக்கின்றார் ஆழ்வார்.

*''மந்தி பாய் வட வேங்கட மாமலை வானவர்கள்*
*சந்தி செய்ய நின்றான் அரங்கத் தரவின்*
*அணையான்*

## பிளாஸ்டிக் தடை

**திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்திர தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்கள் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள்.**

*அந்தி போல் நிறத்தாடையும் அதன் மேல்*
*அவனைப் படைத்ததோர் எழில்*
*உந்தி மேல தன்றோ அடியேன் உள்ளத்து*
*இன்னுயிரே!''*

என்று உருகுகின்றார் ஆழ்வார்.

"பிரம்மாவான நான்முகனைத் தோற்றுவித்த திருமாலின் நாபிக் கமலத்தின் மேல் என் உயிர் படிந்து விட்டது" இவ்வாறு பத்துப் பாடல்களையும் அழகாகப் பாடி முடித்தார் திருப்பாணாழ்வார்.

கடைசிப் பாடலில் பெருமாளை கண்ட கண்கள் இனி வேறு எதையும் பார்க்காதாம்.

*''கொண்டல் வண்ணனைக் கோவலனாய்*
*வெண்ணெய்*
*உண்ட வாயன் என் உள்ளங்கவர்ந்தானை*
*அண்டர் கோனணி அரங்கனென்னமுதினைக்*
*கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''*

பல நாட்கள் அருகே சென்று காண இயலாத பெருமாளை அருகில் இருந்து தரிசனம் செய்த திருப்பாணாழ்வார் தன்னையே மறந்தார். ஆனந்தக் களிப்பில் மூழ்கினார். தன்னையே இழந்தார். தன் நாமமும் கெட்டார். தலைப்பட்டு விட்டார். தலைவன் தாழ் என்பதே உண்மை என்ன ஆயிற்று ஆழ்வாருக்கு?

பத்தாவதுப் பாடலை பாடி முடித்தார். அனைவரும் காணுமாறு பெருமாளின் திருவடிகளில் புகுந்தார். இவ்வுலகை பிரிந்தார். பெருமாளோடு ஐக்கியமாகி விட்டார். "ரங்கநாதப் பெருமாள் வாழ்க! திருப்பாணாழ்வார் வாழ்க! அவர் தம் பாடல்கள் வாழ்க!" என்ற குரல்கள் எங்கும் எழுந்தன.

திருப்பாணாழ்வார் லோக சாரங்க முனிவரின் தோள்களில் ஏறி திருமாலைக் காணச் சென்றதால் அவருக்கு "முனி வாகனர்" என்ற பெயரும், பெருமாளின் மீது உன்னதமானப் பாடல்களைப் பாடியதால் "கலீஸ்வரர்" என்ற பெயரும் அவருக்கு உண்டாகின.

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இவர் பாடிய பத்து பாடல்களும் நவ மாணிக்கங்களாக ஒளிர்கின்றன.

செல்வாக்கோ, பதவியோ, பணமோ, குலமோ பெருமாளை அடைய தடையில்லை. பக்தி இருந்தால் போதும். பெருமாளின் திருவடிகளை அடையலாம் என்பதற்கு திருப்பாணாழ்வாரின் வாழ்வே ஒரு சாட்சியாக உள்ளது.

இராமாநுஜரின் கோட்பாட்டிற்கு அடித்தளமாக இருந்தது திருப்பாணாழ்வாரின் பக்தியே என்றாலும் தவறில்லை.

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.3 அக்டோபர் 2022 விடைகள்

1. சத்ருக்னன்.
2. நம்மாழ்வார்.
3. அஷ்டாக்ஷர விமானம், அஷ்டாங்க விமானம்.
4. அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு, ஆரண்ய வழி, ஸ்வாமி பாதாலு.
5. நரகாசுரன்.
6. பொறாமை.
7. சத்ருக்னன்.
8. திருப்பாணாழ்வார்.
9. 1998.
10. திருவட்டாறு.
11. ஸ்ரீவேங்கடாத்ரி வரசிகராத்ரி.
12. சிக்கல்.
13. ஆகஸ்ட் 2021.
14. பரகாமணி.
15. திருவண்வண்டூர்.




**போட்டி எண்.3ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் ஜி. ரேவந்த், திருப்பர புலியூர், கரூர் மாவட்டம்.
2. செல்வி எம்.பி. ஸ்ரீலோஷினி, மருங்கூர், திருவாரூர் மாவட்டம்.
3. செல்வி அ. சியாமளா, முகலிவாக்கம், சென்னை.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 77

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | 2 | | | 3 |
| | | 4 | | | | | | | 5 | | |
| | | | | 6 | | | | | | | |
| | | 7 | | | | | | | | 8 | |
| | | 9 | | | | | | | | | |
| | | | 14 | 10 | | 11 | | | | | |
| 12 | | | | | 13 | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | 15 | | | | |
| | | | | | | 16 | | | | | |
| | 17 | | | | | | 18 | | | | |
| 19 | | | | | 20 | | | | | | 21 |

தொகுப்பு :
**திரு. எஸ். ராஜ்குமார், சென்னை.**

**புதிருக்கான விடை இந்த இதழிலேயே உள்ளது. கண்டுபிடித்து பதிலை சரிபார்க்கவும்.**

## இடமிருந்து வலம்

1. ஏழு சப்ததான தலங்களில் ஒன்று....(8)
4. திருமால் திருக்கோயில் கொடி ஏற்றத்தில் இருக்கும் உருவம்....(4)
6. பாண்டவர்களில் ஒருவர்....(4)
7. ஸ்ரீகோவிந்தராஜ பெருமாளின் திருநட்சத்திரம்.....(5)
9. மகா பூர்ணர் என்று அழைக்கப்பட்டவர்...(6)
11. இராமாயண காலத்தில் சஞ்சீவி மலையை அனுமன் தூக்கி வந்த பின்னர் ....(5)யில் தங்கி ஓய்வெடுத்தார்
13. கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டங் களில்...(6)பிரசித்தமாக நடை பெறும்.
15. பஞ்ச பூதங்களில் ஒன்று....(4)
16. கருடனின் எட்டு சம்பத்துக்களில் ஒன்று....(3)
18. ....(3) தினத்தில் கருட தரிசனம் கிடைத்தால் லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும்

## வலமிருந்து இடம்

5. விஷ்ணுவுக்குறிய படைக்கலங்களில் ஒன்று...(2)
8. மரிஷி மகரிஷியின் பேரன்....(4)
10. ஸ்ரீரங்கத்து நதி....(3).
21. பெருமாளின் மண்டபத்தலங்களில் காஞ்சிபுரத்தை ...(8) என அழைப்பர்

## மேலிருந்து கீழ்

2. சுக்ராசாரியார் ....(11) தலத்தை வழிபட்டு பார்வை பெற்றார்
3. திருமழிசையாழ்வார் அருளிச்செய்தது ...(11)
9. திருமங்கையாழ்வார் பாடிய பிரபந்தம் ...(11)
10. நம்மாழ்வாரின் தந்தை...(4)
14. சப்த ரிஷிகளில் ஒருவர்...(7)

## கீழிருந்து மேல்

12. பஞ்ச நாராயணத் தலங்களில் ஒன்று....(5)
17. திருச்சானூரின் மற்றொரு பெயர்.....(10)
19. திருப்பாணாழ்வாரின் அவதாரத்தலம்......(5)
20. திருமால் மீது தன்னை பெண்ணாகப் பாவித்து பாடல்களை பாடியதால் நம்மாழ்வார்.....(5) நாயகியானார்

### தடை விதிக்கப்பட்ட பொருட்கள்

**திருமலை ஆலயத்திற்குள் தேங்காய், செல்போன், டிஜிட்டல் கைகடிகாரங்கள் போன்ற மின்னணு பொருட்கள், காலணிகள், வெடிப்பொருட்கள், பிளாஷ்டிக் பொருட்கள் எடுத்து செல்லுதல் கூடாது**

# திருப்பாவை தேன் துளிகள்




ஸ்ரீஆண்டாள் ஸ்ரீகிருஷ்ணரின் அருளைப் பெற திருப்பாவை விரதத்தினை ஸ்ரீவில்லிபுத்தூரில் தன் தோழியருடன் கடைபிடித்தாள். தான் மேற்கொண்ட அவ்விரத வழிமுறையினை நமக்கும் தெரியப்படுத்தினாள். அதுவே திருப்பாவை பிரபந்தமாயிற்று. திருப்பாவை 30 பாசுரங்களைக் கொண்டது. இந்த 30 பாசுரங்களின் தேன் துளிகள் நம் “ஸப்தகிரி” வாசகர் களுக்காக...

அருள் பெற்றிடுவோம்! அனுசரிப்போம் வாருங்கள்!!

**மார்கழித்திங்கள்...** இடைப்பெண்களே! இது மார்கழி மாதம் சந்திரன் பூரணமான நன்னாளில் நாம் நாராயணனான ஸ்ரீகிருஷ்ணனை வணங்கினால், அவன் நம் விரதத்திற்கான பலனை அளித்திடுவான். வாருங்கள்.

**வையத்து வாழ்வீர்காள்...** இந்த விரதத்தின் போது தினமும் அதிகாலையில் நீராடுவோம். நெய், பால் உட்கொள்ளோம். மைதீட்டோம். மலரைச் சூடோம். செய்யத் தகாதவற்றை செய்யோம். பெரியோர் வழி கடைபிடிப்போம்.

**ஓங்கி உலகளந்த...** திரிவிக்ரமனை அதிகாலையில் நாம் நீராடி துதித்தால் மாதம் மும்மாரி பெய்யும். விவசாயம் செழித்திடும். பசுக்கள் குடம் குடமாய் நிறைய பால் சொரியும். குறைவற்ற செல்வம் நிறைந்திடும்.

**ஆழி மழைக் கண்ணா...** மழைக்கு அதிபதியான வருணனே! நீ கடல் நீரைப் பருகி, நாராயணன் உருவம் போல் கருத்து, பத்மநாபன் கையில் உள்ள சக்கரம் போல் மின்னி, சங்கு போல் இடி இடித்து உலகம் வாழும்படியாக மழை பெய்திடாய்.

**மாயனை மன்னு...** வடமதுரையில் அவதரித்தவனும், யமுனைத் துறை தலைவனும், திருவிளக்கைப் போன்று ஒளி உடையவனுமான தாமோதரனை தூய புஷ்பங்கள் கொண்டு தூவி, அவன் நாமங்களைப் பாடினால் நம் பாவங்கள் தீயிலிட்ட தூசு போன்று உருத் தெரியாமல் போகும்.

**புள்ளும் சிலம்பின...** பெண்ணே பறவைகள் கூவுகின்றன. கோயிலில் பெரிய சங்கின் ஒலி கேட்டிலையோ, பூதனையின் நச்சுப்பாலை உண்டவனை யோகிகளும், முனிவர் களும் தியானித்து துதிக்கும் ஹரிநாமம் கேட்கவில்லையா. எழுந்து வா.

**கீசு கீசென்று...** பெண்ணே! பாரத்வாஜ பறவைகள் கீசுகீசு என்று ஒலி எழுப்புவது கேட்கவில்லையா? இடைப் பெண்கள் தயிர் கடையும் ஓசை கேட்கவில்லையா? நாங்கள் நாராயணனைத் துதித்து பாடுகின்றோம். கதவைத்திற.




**கீழ்வானம் வெள்ளென்று...** பெண்ணே! கீழ்வானம் வெளுத்து விட்டது. எருமைகள் பனிப்புல் மேய சென்று விட்டன. கோபிகைகள் கிருஷ்ணனை துதிக்க போகாமல் உனக்காக அனைவரையும் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். அப்பரம் பொருள் இரங்கி அருள் புரிவான். உடனே புறப்பட்டு வா.

**தூமணி மாடத்து...** வீடு முழுக்க விளக்கு எரிய பஞ்சணை மீது படுத்துறங்கும் மாமன் மகளே! தாழ்ப்பாளை திறந்து விடு. அவளுடைய தாயைப் பார்த்து, உன் மகள் ஊமையா? செவிடா? மீளா உறக்கம் கொண்டாளா? நாங்கள் மாமாயன் மாதவன் வைகுந்தன் என்று ஆயிரம் நாமங்களும் சொல்லி விட்டோம். அவள் எழுந்திருக்கவில்லையே.

**நோற்றுச் சுவர்க்கம்...** பெண்ணே! வாசலைத் தான் திறக்கமாட்டாய். எங்களுக்கு பதிலாவது சொல்லக் கூடாதா? நாராயணனான ஸ்ரீகிருஷ்ணனை நாம் துதித்தால் அவன் நமக்காக பலனைத் தந்திடுவான். கும்பகர்ணன் தன் உறக்கத்தை உனக்களித்தானா? கதவைத் திற.

**கற்றுக் கறவைக்...** கண்ணனுக்கு ஏற்ற தங்கக் கொடி போன்றவளே! கிருஷ்ணனின் செல்வப் பெண்டாட்டியே! மயில் போன்ற சாயல் உடையவளே! உன் தோழிமார்களாகிய நாங்கள் உன் முற்றத்தில் வந்து நின்று கண்ணனை துதிக்கின்றோம்! நீ எழுந்து வாராய்.

**கனைத்து இளங்...** கிருஷ்ண கைங்கர்யமாகிற மேலான செல்வத்தை உடையவனுடைய தங்கையே! இராவணனைக் கொன்ற இராமனை நினைத்தாலே மனதுக்கு இன்பத்தைத் தரும். பேரைச் சொல்லியும் நீ வாய் திறவாமல் இருக்கின்றாய். நீ சீக்கிரம் எழுந்திராய்.

**புள்ளின் வாய்...** பகாசுரனையும், இராவணனையும் அழித்தவனான கண்ணனைப் பாடி நோன்பு நோற்கும் பிள்ளைகள் களத்திற்குச் சென்று விட்டார்கள். சுக்கிரன் உச்சிப்பட்டு வியாழன் மறைந்தான். நீயும் எங்களோடு சேர்ந்து வாராய்.

**உங்கள் புழைக்கடை...** பெண்ணே! உன் புழைக்கடை யில் உள்ள குளத்தில் செங்கழுநீர் மலர்ந்தது. அல்லி மலர் மூடிக் கொண்டது. சன்னியாசிகள் கோயிலுக்கு சங்கு ஊதச் செல்கின்றனர். சங்கு சக்கரம் ஏந்திய கமலக்கண்ணனை நாம் துதித்தல் வேண்டும். எழுந்திராய்.

**எல்லே இளங்கிளியே...** இளமை தங்கிய கிளிபோல் இருப்பவளே! எழுந்திராய். வாய்ப்பேச்சில் நீ சமர்த்தையாய் இருக்கின்றாய் என்பதை நாங்கள் அறிவோம். தோழிகள் அனைவரும் வந்தனரா. வந்தனர், ஆச்சரியமான செய்கை

களை உடையவனான கண்ணனை பாடுவதற்காக எழுந்திராய்.

**நாயகனாய் நின்ற...** நந்தகோபனுடைய திருமாளிகையைக் காப்பவனே! அழகிய தாழ்ப்பாளைத் திறந்து விடு. இடைச் சிறுமிகளுக்கு நீல நிற வண்ணனாகிய ஸ்ரீகிருஷ்ணன் சப்திக்கும் பறையைக் கொடுப்பதாக நேற்றே வாக்களித்தான். அவன் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் படி பாட வந்திருக்கிறோம்.

**அம்பரமே தண்ணீரே...** வஸ்திரங்களையும், தண்ணீரையும், சோற்றினையும் தர்மம் செய்யும் நந்த கோபரே! ஆயர்குலத்து மங்கள தீபமாயுள்ள யசோதைப் பிராட்டியே! ஆகாய ஒளியைத் துளைத்து உலகை அளந்தவனே! வீரக்கழல்களை அணிந்த பலராமா எழுந்திருக்க வேணும்.

**உந்து மதகளிற்றன்...** யானை போல் பலமுள்ளவ ரான நந்த கோபருடைய மருமகளே! நீளாதேவியே எழுந்திரு. கோழிகள் அழைத்தன. குயில்களும் கூவின. உன் நாதனாகிய கண்ணபிரானுடைய நாமங்கள் பாட வந்தோம். மகிழ்வுடன் கதவைத் திறப்பாயாக.

**குத்து விளக்கெரிய...** நிலை விளக்கானது எரிய, யானைத் தந்தங்களால் செய்யப்பட்ட பஞ்சனையில் நீளா தேவியுடன் உறங்கும் ஸ்வாமி! வாய் திறந்து சொல்வாயாக. நீளாதேவி சிறிது போதும் அவனை விட்டு பிரிவதில்லை. இது உன் ஸ்வபாவத்துக்கும் தகுந்ததன்று.

**முப்பத்து மூவர் அமரர்க்கு...** தேவர்களின் பயத்தைப் போக்கும் பலமுள்ளவனே! அழகிய வடிவுடைய நப்பின்னையே! துயில் எழாய். நோன்பிற்கு வேண்டிய உபகரணங்களை அளித்து, எங்கள் விரதத்தினை முழுமை அடையச் செய்திடுவாய்.

**ஏற்ற கலங்கள்...** நந்தகோபனின் மைந்தனே! ஸ்ரீகிருஷ்ணா! எழுந்திராய். உன் எதிரிகள் உனக்கு தோற்று உன் மாளிகை வாசலில் வந்து உன் திருவடிகளை வணங்கி கிடப்பது போல, நாங்களும் உன்னை போற்றி வந்துள்ளோம். துயில் எழுந்து ஆட்கொள்வாயாக.

**அங்கண் மாஞாலத்து...** இப்பூமியை ஆட்சி புரி யும் அரசர்கள் தங்கள் அகங்காரம் குலைந்து உன் சிம்மாசனத்தின் கீழ் கூடி இருப்பது போல, நாங்களும் உன் பாதங்களை சரணடைந்தோம் ஸ்வாமி! அழகிய கண்களால் எங்களை கடாக்ஷித்து அருளுங்கள்.



**மாரி மலை முழைஞ்சில்...** மழை காலத்தில் மலைக் குகையில் உறங்கும் வீர்யமுடைய சிங்கம், தேகத்தை உதறி கர்ஜனை செய்து வெளிப்புறப்பட்டு வருவதைப் போல, காயாம்பூ நிற வண்ணா உன் சிம்மாசனத்தில் எழுந்தருளி நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து அருள வேணும்.

**அன்றிவ்வுலகம்...** அக்காலத்தில் இவ்வுலகினை அளந்த ஸ்வாமி! உன் திருவடிகளுக்கு, பலத்திற்கு, உன் புகழிற்கு மங்களம். உன் குணத்திற்கு, உன் கையிலுள்ள வேலாயுதத் திற்கு மங்களம் என உன்னை துதித்து, பறை கொள்வதற்காக வந்துள்ளோம். ஸ்வாமி அருள் புரிய வேண்டும்.



**ஒருத்தி மகனாய்...** ஒரே இரவில் தேவகிக்கு பிள்ளை யாய் தோன்றி, யசோதையின் பிள்ளையாய் ஒளிந்திருந்து வளரும் காலத்தில், கம்சனுடைய வயிற்றில் நெருப்பாய் நின்ற நெடுமாலே! எங்கள் விருப்பத்தை நிறைவேற்று, உன் வீர்ய குணத்தை நாங்கள் பாடி மகிழ்ந்திடுவோம்.

**மாலே மணிவண்ணா...** அடியாரிடத்தில் அன்புடைய மணிவண்ணா! இவ்விரதத்தை நாங்கள் செய்வதற்காக பாஞ்சசன்னிய மான சங்குகளையும், பெரியனவான பறைகளையும், திருப்பல்லாண்டு பாடுமவர்களையும், மங்கள தீபங்களையும், துவஜங்களையும், மேற்கட்டிகளையும் அளித்தருள வேண்டும்.

**கூடாரை வெல்லும்...** தன்னை அடிபணியாதாரை வெல்லும் கோவிந்தா! உன்னைப் பாடி நாங்கள் அடையும் பரிசாவது என்ன வெனில், பலவகை ஆபரணங்களை அணிவோம். பீதாம்பரத்தால் அலங் கரித்துக் கொள்வோம். பால் சோறு நெய்யிட்டு உன்னுடன் கூடி உண்டு மனம் குளிர்வோம்.

**கறவைகள் பின்...** பசுக்களோடு காடு சேர்ந்து உண்டு திரிவோம். எங்கள் குலத்தில் நீ பிறக்கும் புண்ணியத்தை செய்துள்ளோம். கோவிந்தா! உனக்கும் எங்களுக்கும் உள்ள உறவு ஒழிக்க முடியாது. கோபிக்காமல் நாங்கள் விரும்புவதை அருள வேணும்.

**சிற்றஞ் சிறுகாலே...** கோவிந்தா! இடை குலத்தில் பிறந்த நீ நாங்கள் செய்யும் சிறு கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்ளாமல் போகக் கூடாது. ஏழேழு ஜன்மத்துக்கும் உன்னுடன் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். உன் மகிழ்ச்சிக்காகவே உனக்கே தொண்டு புரிய அருள வேண்டும்.

**வங்கக்கடல்...** மாதவனை, கேசவனை அழகிய இடைப்பெண்கள் துதித்து, பாவை நோன்புக்குரிய கைங்கர்யத்தைப் பெற்ற ஸ்ரீவில்லிப் புத்தூரில் பெரியாழ்வாரின் மகளான ஆண்டாள் அருளிச் செய்த 30 பாசுரங்களையும் பாராயணம் செய்தால் லக்ஷ்மி நாதனால் திருவருள் பெற்று இன்புற்று வாழ்வார்கள்.













# தி.தி.தேவஸ்தான நன்கொடை திட்டங்கள்



**– திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி.**

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் சமூக நலன் கருதி நடத்தும் பற்பல அறக்கட்டளைகளுக்கு நன்கொடைதான் மிகப்பெரிய ஊன்று கோல். தினசரி கூலி வேலை செய்யும் தொழிலாளியில் இருந்து கோடீஸ்வரர்கள் வரை செலுத்தும் காணிக்கை வெறும் காசு அல்ல, அவர்களுக்கு பகவான் ஏழுமலையான் மீது உள்ள அபாரமான நம்பிக்கைக்கு அடையாளம். அவனின் அருளால் தங்களுக்கு நடந்த நன்மைக்கு கைமாறாக அவர்கள் செலுத்தும் நேர்த்திக்கடன் அவர்களு டைய பக்தியின் ஆழத்தை குறிக்கும்.

சாதாரணமாக பக்தர்கள் தங்களின் நேர்த்திக் கடனை செலுத்த திருமலையில் உள்ள உண்டியலில் பணத்தை செலுத்தலாம். அதை தவிர, தேவஸ்தானத்தினர் சமுதாய பொறுப்புணர்ச்சியுடன் நடத்தும் பல அறக்கட்டளைகளுக்கும், திட்டங்களுக்கும் நன்கொடை வழங்கலாம். இப்படி செய்வதனால், ஒவ்வொரு பக்தனும் தேவஸ்தானத்தின் உயர்ந்த எண்ணத்திற்கு பங்களிக்கலாம்.

“மானிட சேவையே மாதவன் சேவை” என்ற மகத்தான தத்துவத்தை உணர்ந்த கோயில் நிர்வாகத்தினர்“ஸ்ரீ வேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை”யைத் துவக்கி, அதன் மூலம் திருமலைக்கு வரும் பல் லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு உணவளிக்கின்றனர். இங்கு அளிக்கப் படும் ஒவ்வொரு பருக்கையும் பகவானின் பிரசாதமாகவே கருதப்படு கிறது. ஏழுமலையான் சந்நிதானத்தை அடையும் ஒவ்வொரு பக்தனையும் விருந்தாளியாகக் கருதி அவர்களுக்கு உண்ண உணவு, சிற்றுண்டி, குழந்தைகளுக்கு பால் என அனைத்து வசதிகளையும் செய்யும் தேவஸ் தானத்தினருக்கு நன்கொடையாக பணம் செலுத்தும் பக்தர்களுக்கு
















வருமான வரி சட்டத்தின் (80ஜி) பிரிவின் கீழ் வரிவிலக்கு அளிக்கப் படுகிறது.

கீழ் திருப்பதியிலும், திருமலையிலும் தேவஸ்தானத்தின் ஒரு அங்கமாக பல மருத்துவமனைகள் நடத்தப்படுகின்றன. "ஸ்ரீ வேங்கடேஸ்வரா பிராணதான அறக்கட்டளை" மூலம் நோயாளிகளுக்கு வேண்டிய குறைந்த பட்ச சிகிச்சை மட்டும் அல்லாமல், இருதயம், சிறுநீரகம், மூளை சம்பந்தமான தீவிர கோளாறுகள் உள்ள ஏழை எளிய மக்களுக்கு அறுவை சிகிச்சையும் இலவசமாக செய்யப்படுகிறது. மருத்துவ வல்லுநர்கள் கொண்ட குழு இந்த நோயாளிகளின் குறைகளை தணிக்கை செய்து சிகிச்சை முறையை தீர்மாணிக்கிறது. மருத்துவச் செலவு அதிகரித்துக்கொண்டே செல்லும் இந்த காலகட்டத்தில் ஏழைகளுக்கு இந்த அறக்கட்டளை ஒரு மிகப்பெரிய வரம்.

"ஸ்ரீ வேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷண அறக்கட்டளை" கால்நடைகளை காப்பதற்காக 2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பசுவதை தடுப்பு மற்றும் கால்நடை பாதுகாப்பு என்பது சனாதன தர்மத்தின் ஆணிவேராக கருதப்படுகிறது. தேவஸ்தானத்தினரால் 1956 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட "ஸ்ரீ வேங்கடேஸ்வரா பசுக்கள் காப்பகம்" இன்று ஓங்கோல், புங்கனூர், சாஹிவால், கிர், காங்கிரேஜ் போன்ற அருகிவரும் நாட்டுவகை பசுக்களை பாதுகாத்து, அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்க பாடுபடுகிறது. இந்த அறக்கட்டளைக்கு அளிக்கப்படும் நன்கொடை இந்த மகத்தான திட்டத்திற்கு உதவும்

"ஸ்ரீ வேங்கடேஸ்வரா வித்யாதான அறக்கட்டளை" 2008 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, அதன்மூலம் வறுமைக்கோட்டின் கீழே வாழும் 1000 மாணவர்களுக்கு வருடாவருடம் உதவித்தொகை அளிக்கப்படுகிறது. அரசு பள்ளிகளில், அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் மற்றும் தேவஸ்தானத்தினர் நடத்தும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் இதற்கு தகுதி பெறுவர். ஒரு மாணவனுக்கு வழி காட்டினால் ஒரு தலைமுறைக்கே அவன் வழிகாட்டியாவான் என்ற குறிக்கோளுடன் இந்த அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது.

உடல் ஊனம் என்பது ஒருவரின் வாழ்வை குலைக்கும் மிகப்பெரிய சாபம். உடல் ஊனமுற்றோரின் நலன் கருதி தேவஸ்தானத்தினர் "பாலாஜி ஊனமுற்றோர் அறுவை சிகிச்சை, துயர்நீக்கம் மற்றும் மறுவாழ்வு அறக்கட்டளை" (பர்ட்)யை நிறுவினர். இங்கு போலியோ, பெருமூளை வாதம், பிறவி கோளாறுகள் மற்றும் தண்டுவட பிரச்சனைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேன்மையான மருத்துவக்கருவிகள் கொண்ட இந்த பர்ட் ஆசியாவிலேயே ஊனமுற்றோருக்கான சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றாகும். தகுதி பெற்ற நோயாளிகளுக்கு இங்கு இலவச அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. வேதங்கள் இந்து மதத்தின் அடையாளம். சனாதன மதத்தின் சின்னமே நமது வேத பரம்பரையில் தான் தொடங்கியது. பழம்பெரும் வேதங்களை பாதுகாத்து, அவற்றின் புகழை பரப்புவதற்கும், வேதம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை

யைப் பெருக்குவதற்கும் 2007ஆம் ஆண்டு "ஸ்ரீ வேங்கடேஸ்வரா வேத பரிரக்ஷண அறக்கட்டளை" தொடங்கப்பட்டது. இதற்கு அளிக்கப்படும் நன்கொடை மூலம், வேத பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. இளைய தலைமுறைக்கு அவர்களின் ஞானத்தை பகிர்ந்திட மூத்த வேதபண்டிதர் களுக்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

"ஸ்ரீ வேங்கடேஸ்வரா பாரம்பரியம் பாதுகாப்பு அறக்கட்டளை" 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் மூலம் பாழடைந்த கோயில்கள், மண்டபங்கள் மற்றும் பழமைவாய்ந்த பொக்கிஷங்களை மராமத்து செய்து, பாதுகாத்து, நம் வேத மதத்திற்கு மறுமலர்ச்சி அளிக்கும் மிகப்பெரிய பொறுப்பை தேவஸ்தானம் ஏற்றுக்கொண்டது. இந்த திட்டத்திற்கு உதவி செய்யும் ஒவ்வொரு பக்தனுக்கும் நமது கோயில் வழிபாட்டு முறையைக் காத்து, பேணுவதில் பங்களிப்பு உண்டு.

1943 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட "ஸ்ரீ வேங்கடேஸ்வரா பால மந்திரம்" அனாதை குழந்தைகளுக்கு காப்பகமாகத் திகழ்கிறது. பிறகு இது "ஸ்ரீ வேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ் டிரஸ்ட்"என்று பெயர்மாற்றப்பட்டது. பெற்றோரை இழந்த குழந்தைகள் மட்டும் அல்லாமல், நிதி வசதி இல்லாத குழந்தைகளுக்கும் இங்கு கல்வி, தங்குமிடம் வழங்கப் படுகிறது. இறைவனின் அருளுடன், நல்லாசியுடன் இங்கு கல்வி கற்கும் குழந்தைகள் பிற்காலத்தில் பெரும் மேதைகளாகத் திகழ்வதற்கு பக்தர்களின் நன்கொடை பெரிதும் உதவும்.

"ஸ்ரீ வேங்கடேஸ்வரா ஆலய நிர்மாண (ஸ்ரீவாணி) அறக்கட்டளை" நாடெங்கிலும் ஏழுமலையான் திருக்கோயில்கள் நிர்மாணித்து, பாதுகாத்து, பக்தியைப் பரப்பும் கொள்கையுடன் புதிதாக தொடங்கப் பட்டது. இந்த அறக்கட்டளைக்கு அளிக்கப்படும் தொகை அந்த கோயில்களில் பல்வேறு ஆன்மீக நிகழ்ச்சிகளை நடத்தவும் உதவும்.

"ஸ்ரீ பாலாஜி ஆரோக்கிய வர ப்ரசாதினி திட்டம்" 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தேவஸ்தானத்தின் "ஸ்ரீ வேங்கடேஸ்வரா மருத்துவ உயர்கல்வி நிறுவனம்" (ஸ்விம்ஸ்) வாயிலாக ஆராய்ச்சி மற்றும் மேன்மையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கு ஏழை நோயாளிகள் இலவசமாக மருத்துவ உதவி பெறுகின்றனர்.


மேற்கண்ட இந்த அறக்கட்டளைகளுக்கு நன்கொடையை காசோலையாகவோ, வரைவோலையாகவோ, "செயலாட்சித்தலைவர், திருமலை திருப்பதி தேவஸ்தானம்" என்ற பெயருக்கு எடுத்து, அதை தி.தி.தே. நிர்வாக அலுவலகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி 517 501 என்ற முகவரிக்கு தபால் மூலமாக அனுப்பலாம்.

"ஸ்ரீ வேங்கடேஸ்வரா பக்தி சேனல்" (எஸ்.வி.பி.சி) வேங்கடாசலபதியின் புகழை பாரெங்கும் பரப்பும் நோக்கத்துடன் 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திருமலையில் அன்றாடம் நடக்கும் உற்சவங்களையும், இதர நிகழ்வுகளையும் பக்தர்களின் வீட்டிற்கே கொண்டு செல்லும் இந்த தொலைக்காட்சிக்கும் நன்கொடை














அளிக்கலாம். காசோலை அல்லது வரவோலை எடுத்து, "பிரதான செயல் அதிகாரி, எஸ்.வி.பி.சி, அலிபிரி, திருப்பதி 517 507" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

### நன்கொடைதாரர்களுக்கு தேவஸ்தானத்தினர் அளிக்கும் சிறப்பு சலுகைகள்

ஒரு லட்சம் முதல் ஐந்து லட்சம் ரூபாய் வரை அளிப்போருக்கு ஐந்து நபர் குடும்பத்தாருடன் திருமலை கோயிலில் சுபதம் வாயில் வழியாக வருடத்திற்கு ஒருமுறை (அன்றைய சூழ்நிலையைப் பொறுத்து) தரிசனம் அளிக்கப்படும். இலவச விடுதி அல்லது பணம் செலுத்தி விஜபி விடுதியும் பெறலாம். ஆண்டுக்கொரு முறை ஆறு சிறிய லட்டு பிரசாதம், ஒரு மேல் துண்டு, ரவிக்கை துண்டு பெறலாம். இது நன்கொடைதாரர் வாழ்நாள் முழுவதும் அளிக்கப் படும். நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கு இருபது ஆண்டுகள் வரை இந்த சலுகை உண்டு.


ஐந்து லட்சம் முதல் பத்து லட்சம் வரை நன் கொடை செலுத்துவோருக்கு மேற்கூறிய அதே தரி சன மற்றும் விடுதி சலுகை வருடத்திற்கு மூன்று முறை அளிக்கப்படும். பத்து லட்டுகள், மேல் துண்டு, ரவிக்கை துண்டுடன், ஒரே ஒரு முறை 50கிராம் வெள்ளி டாலர் அளிக்கப்படும். பத்து லட்சம் முதல் ஒரு கோடி ரூபாய் வரை செலுத்தும் கொடைதாரர் களுக்கு ஆண்டுக்கு மூன்று முறை விஜபி பிரேக் தரி சனம் அவர் குடும்பத்தினர் ஐவருக்கு அளிக்கப்படும். இலவச விடுதி அல்லது 500 ரூபாய் மதிப்புள்ள அறையை பணம் செலுத்தி பெறலாம். 50 கிராம் வெள்ளி டாலருடன், 5 கிராம் தங்கக் காசும் ஒரே ஒரு முறை அளிக்கப்படும். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நன்கொடை அளிக்கும் நபரின் குடும்பத்தார் ஐவருக்கு ஆண்டொன்றுக்கு மூன்று நாட்கள் விஜபி பிரேக் தரிசனம் மற்றும் வேறு மூன்று நாட்களுக்கு சுப்ரபாத சேவையில் பங்கு கொள்ளும் வாய்ப்பும் அளிக்கப்படும். ஆண்டொன்றுக்கு பத்து பெரிய லட்டுகளும், வாழ்நாளில் ஒரே ஒரு முறை 50 கிராம் வெள்ளி டாலரும், 5 கிராம் தங்கக்காசும் பெறலாம்.

ஸ்ரீவாணி அறக்கட்டளைக்கு பத்தாயிரம் ரூபாய் செலுத்துவோருக்கு ஒரு விஜபி பிரேக் டிக்கெட்டுக் கான சலுகை அளிக்கப்படும். ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் என்ற கணக்கில் அதிகபட்சமாக ஒன்பது பேர் வரை செல்லலாம். இந்த சலுகையை உபயோகிக்க அவர்கள் ஒவ்வொருவரும் 500 ரூபாய் செலுத்தி டிக்கெட் வாங்கவேண்டும்.

அனைத்து நன்கொடைகளுக்கும் வருமான வரி சட்டத்தின் 80(ஜி) பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு. எக்காரணத்தை கொண்டும் தனி நபருக்கு திருமலை யில் தங்க விடுதி வசதி அளிக்கப்படமாட்டாது.

மேற்கண்ட அறக்கட்டளைகளுக்கும், திட்டங்க ளுக்கும் நன்கொடை வழங்கி, ஒரு மேன்மையான உலகத்தை உருவாக்க பாடுபடும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரின் கொள்கைக்கு நாமும் துணை புரியலாமே......!

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



தத்$_3$தேசபூ$_4$பஸ்ய ஸுதே பிசாசக்$_3$ரஸ்தேந்ய
மந்த்ரைரகி$_2$லைரஸாத்$_4$யே ।
பூ$_4$பஸ்தத$_3$ா யாத$_3$ வமந்த்ரமோச்ய
இத்யேவமாகர்ண்ய தமாநிநாயா॥

(17)

**அந்த நாட்டு அரசனுடைய பிள்ளை பிசாசத்தால் பீடிக்கப்பட்டு, எவர் செய்யும் மந்திரத்திற்கும் கட்டுப்படாதிருந்தவளவில், அரசன் "இப்பிசாசம் யாதவருடைய மந்திரத்தால் விரட்டப்படும்" என்று செவியுற்று, யாதவரை வரவழைத்தான்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## एकोनविंशः पाठः பாடம்-19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| किम् | = என்ன, எது | एतत् | = இது, இந்த | कस्य | = எவருடைய |
| नु | = எது | भोः | = ஐயா (அவர்கள்) | हे | = ஓ |
| करिष्यन्ति | = செய்வர் | करिष्यथ | = நீங்கள் செய்வீர்கள் | करिष्यामः | = செய்வோம் |

### வினாக்கள்

1. किं तत्?
2. तत् किम्?
3. एतत् कस्य गृहम्?
4. तत् मम गृहम्।
5. तत् जलम्।
6. एतत् युष्मद्गृहम्।
7. ते तटाक जले स्नानं करिष्यन्ति भोः।
8. युष्मद्गृहे घृतं अस्ति वा?
9. नास्ति भोः।
10. ते कदा स्नानं करिष्यन्ति, कदा पाकं करिष्यन्ति?

1. நாங்கள் நாளை சமையல் செய்வோம்.
2. இவர்கள் இப்பொழுது செய்வார்கள்.
3. நீங்கள் எப்பொழுது செய்வீர்கள்?
4. நாங்கள் செய்யவே மாட்டோம்.
5. நீங்கள் எதற்கு செய்யமாட்டீர்கள்?
6. எங்கள் வீட்டில் உணவு உள்ளது.
7. எங்கள் பிள்ளை உங்கள் வீட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறான் ஐயா?
8. குளிக்கின்றனரோ என்னமோ!
9. விரைவில் குளிப்பார்களாக!
10. அவன் விரைவில் செய்யாது போனால் நான் என்ன செய்யமுடியும்?

### விடைகள்

1. அது என்ன?
2. அது என்ன?
3. இது எவருடைய வீடு?
4. அது என்னுடைய வீடு.
5. அது தண்ணீர்.
6. இது உங்களுடைய வீடு.
7. ஐயா! அவர்கள் குளத்து நீரில் குளிப்பார்கள்.
8. உங்கள் வீட்டில் நெய் உள்ளதா?
9. இல்லைங்க.
10. அவர்கள் எப்பொழுது குளிப்பார்கள், எப்பொழுது சமையல் செய்வார்கள்?

1. वयं श्वः पाकं करिष्यामः।
2. एते अजुना करिष्यन्ति?
3. यूयं कदा करिष्यथ?
4. वयं कदापि नैव करिष्यामः।
5. यूयं किमर्थं न करिष्यथ?
6. अस्माकं गृहे अन्नम् अस्ति।
7. भोः! अस्माकं बालकः युष्माकं गृहे किं करोति!
8. स्नानं करोति प्रायः!
9. वेगेन स्नानं करोतु!
10. भोः सः वेगेन न करोति चेत् अहं किं कर्तुं

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்



72

108 திவ்யதேச வைபவம்

# திருவித்துவக்கோடு

- உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

மஹாபாரதப்போர் முடிந்தவுடன் பாண்டவர்கள் ஐவரும், தலயாத்திரை செய்து வரும்போது இவ்வூருக்கு வந்ததாகவும், இங்கு இருந்த ரிஷிகளை இவ்வூரின் அருமையைப் பற்றிக் கேட்டதாகவும் அதற்கு ரிஷிகள் அம்பரீஷ அரசனைப் பற்றிச் சொன்னதாகவும் புராணம் சொல்கிறது.

அம்பரீஷன் நேர்மையாக அரசு புரிந்து, சந்ததி வேண்டி இங்கு வந்து தவம் செய்ததாகவும் அரசனைச் சோதிக்கும் விதமாக பகவான், இந்திரன் உருவில் ஐராவதம் யானையின் மீது அரசனின் முன்பு வந்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டதாகவும், அம்பரீஷன், இந்திரனை வெறுத்து, முக்கரணங்களாலும் பகவானைத் தவிர யாரையும் பற்ற வில்லை என்றும், பகவானின் திருவடிகளையே பற்றியிருப்பதாகச் சொன்னவுடன், பகவான் மகிழ்ந்து தரிசனம் கொடுத்து, சக்கரத்தாழ்வானையே அரசனுக்கு அருளியதாகவும், அரசனுக்கு ஒரு மகள் பிறந்து "ஸ்ரீமதி" என்கிற பெயரில் பகவானுக்கே திருமணம் செய்து கொடுத்ததாகவும், துர்வாசரால் த்வாதசி விரதத்துக்கு ஏற்பட்ட தடையை, சக்கரத்தாழ்வார் நீக்கியதாகவும், இங்கு தான் மூன்று புதல்வர்களைப் பெற்று அவர்களிடம் அரசு உரிமையைக் கொடுத்து மோக்ஷம் அடைந்தான் என்றும் சொல்லப்படுகிறது.

அம்பரீஷனால் துதிக்கப்பட்டவர் வ்யூஹ மூர்த்தி என்றும், பாண்டவர்கள் இங்கு வந்தபோது முதல் நான்கு பேரும் பரவாசுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று வணங்கியதாகவும், நகுலன் வணங்கிய அநிருத்தன் திருவுருவத்தையே சகாதேவனும் வணங்கியதாகவும் அதனால் ஐவரும் மன அமைதி அடைந்து பேரின்பம் எய்தினர் என்றும் சொல்வர்.

**சிறப்புகள்**

பாண்டவர்கள் ஐந்து பேரும், இங்கு ஒரு சேர வந்து இவ்வெம்பெருமானைத் தரிசித்து இருக்கிறார்கள். மலைநாட்டு திவ்ய தேசங்களில், குலசேகர ஆழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ள திவ்யதேசம் இது ஒன்று தான்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | அபயப்பிரதானப்பெருமாள், உய்யவந்தபெருமாள், |
| தாயார் | : | வித்துவக்கோட்டுவல்லி பத்மபாணி |
| விமானம் | : | தத்வகாஞ்சன விமானம், ஸத்வகாஞ்ச விமாநம் |
| தீர்த்தம் | : | சக்ரதீர்த்தம் |

ப்ரத்யக்ஷம் : அம்பரீஷனுக்கு

ஆகமம் : நம்பூதிரிகளின் பூஜாக்ரமம்

மங்களாசாஸனம் : குலசேகர ஆழ்வார்

**விசேஷம் :**

திருவித்துவக்கோட்டு எம்பெருமானைத் தரிசித்து வாழாமல், பரமபதத்துக்குச் செல்கிறேன் என்பது, ஒருவன் பசியோடு சோறு சோறு என்று வேண்டும் போது அவனுக்கு வேண்டிய உணவை அளிக்காமல், உணவின் மீது விருப்பம் இல்லாதவர் களை அழைத்து சோறு இடுவது போன்றது பக்தர்கள் மீது இந்த எம்பெருமான் கொண்டுள்ள பேரருள் என்பது. இது ஸ்ரீ பெரிய வாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.

**தியான ச்லோகம்**

*வித்வத் கோஷ்டாபிதாநேப்யபயத பகவான்*
*பத்ம ஹஸ்தாஸஹாய:*
*சேஷஸ் யாங்கே சயா நோயமதிகபிமுக: சக்ர*
*தீர்த்தஸ்யதீரே*

*துர்வாஸ: ப்ராப்த கோராபதமபி சமிதும்*
*சாம்பரீஷப்ரஸந்த:*
*நித்யம் புத்திம் சமஹ்யம் ப்ரதிசது விசதாம்*
*தத்வயுக்வ்யோம யாந:*

**பாசுரம்**

*"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காதல் நோயாளன் போல், மாயத்தால்*
*மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டு*
*அம்மா! நீ*
*ஆளா உனது அருளே பார்ப்பன் அடியேனே".*

– குலசேகர ஆழ்வார்

*"வாய்த்த கருமம் இனி மற்று இல்லை,*
*நெஞ்சமே !*
*தோய்த்த தயிர் வெண்ணெய் தொட்டு உண்ட*
*- கூத்தன்*





**குறிப்பு :**
குருவாயூரிலிருந்து 32 கி.மீ. பாரதப்புழா ஆற்றின் கரையில் இவ்வாலயம் அமைந்து உள்ளது.



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

இரத்தம் தானம் செய்யுங்கள்!
ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!

*திருவித்துவக்கோடு சேர்ந்தால் பிறவிக்*
*கருவில் துவக்கு ஒடும் காண்''*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்** (பகவானின் பராக்ரமம் (சக்தி)

661. *ஓம் க்ருதாகம: நம:*

ஆகமங்களை அருளியவனே

*ஓம் ஸர்வரஞ்சிந்யை நம:*

எல்லோரையும் சந்தோஷப்படுத்துபவளே

662. *ஓம் அநிர்தேஸ்யவபு : நம:*

யுகந்தோறும் பற்பல வடிவமெடுப்பதால் நிரூபிக்க இயலாத திருமேனிகள் உள்ளவனே.

*ஓம் த்வஜச் சத்ராஸ்ரயாயை நம:*

ஐச்வர்ய சின்னங்களான கொடி முத்துக் குடை போன்றவற்றைச் சேர்ப்பிப்பவளே

663. *ஓம் விஷ்ணு: நம:*

எங்கும் பரந்து உள்ளவனே

*ஓம் பூம்யைநம:*

செல்வம் அளிப்பவளே

664. *ஓம் வீர: நம:*

சாதுக்களின் கஷ்டங்களைப் போக்குபவனே

*ஓம் வைஷ்ணவ்யை நம:*

எல்லாவற்றிலும் புகுந்து இயக்கவல்ல பெருமை உடையவளே

665. *ஓம் அநந்த: நம:*

காலதேச குணங்களால் வரையறுத்துச் சொல்ல இயலாதவனே

*ஓம் ஸத்குணோத்ஜ்வலாயை நம:*

நற்குணங்களாலே சிறந்து விளங்கு பவளே

666. *ஓம் தநஞ்ஜய: நம:*

தனத்தைத் தாழ்த்தியவனே

*ஓம் ஸுஷேணாயை நம:*

ஸுத்தஸத்வத்தால் ஆன மங்களமான திருமேனி உடையவளே

667. *ஓம் ப்ரஹ்மண்ய: நம:*

சேதநாசேதன அநுகூலனே

*ஓம்லோகவிதிதாயை நம:*

உயர்ந்தவர்கள் விரும்பி அடைய வேண்டி துதிக்கப்படுபவளே.

668. *ஓம் பரஹ்மக்ருத் பரஹ்மாநம:*

உலகங்களைப் படைத்த பிரம்மனுக்கும் தலைவனே

*ஓம் காமஸுவேநம:*

அடியார்கள் விரும்புவதைப் படைத்து அளிப்பவளே

669. *ஓம் ப்ரஹ்ம: நம:*

பிரம்மம் எனப் புகழப்படுபவனே

*ஓம் ஜகதாதிபுவே நம:*

உலகங்களைப் படைக்கும் பிரம்மாவையும் படைப்பவளே

670. *ஓம் ப்ரஹ்ம விவர்த்தந: நம:*

தபஸ்களை வளர்ப்பவனே

*ஓம் வேதாந்தயோந்யை நம:*

வேதாந்தங்களினால் அறியப்படுபவளாயும், வேதங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களின் பலனை அளிப்பவளாயும் இருப்பவளே.

*ஸ்ரீமதே வித்துவக்கோடு நாயிகாஸமேத*
*ஸ்ரீ அபயப்ரதாய பரப்ரஹ்மணே நம:*

திவ்ய தேச வைபவம் வளரும்...

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## பஞ்சகவ்யத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்

### ஊர்வி நாசல் ட்ராப்ஸ்
சளி, தலைவலி தடுக்க, கண், காது & மூக்கின் செயல்பாடுகளை மேம்படுத்த...

### பூமி ஹெர்பல் ப்ளோர் க்ளீனர்
தரையைச் சுத்தப்படுத்தவும், கிருமிகளை அழிக்கவும் மற்றும் இயற்கை நறுமணத்திற்கும்...

### நந்தினி கோ அர்க்
நீண்ட நாள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழிவகுக்கும்.

### க்ஷமா கௌ டங்க் கேக்ஸ்
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன்படுத்தப் படுகிறது.

### பூவட்டி கௌ டங்க் லாக்ஸ்
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன் படுத்துவதால் காற்றுத் தூய்மையாகும்.

### அவனி தூப் சூர்ணம்
நறுமணமாக வரும் வாசனை நம்மை காக்கும்.

### தரணி அகர்பத்தி
பூமித்தாய் போன்று நன்மை நிறைந்தது.

### தாத்ரி சாம்பராணி கப்ஸ்
நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும்.

### வைஷ்ணவி தூப் ஸ்டிக்ஸ்
காற்றைத் தூய்மைப்படுத்தும்.

### வாராஹி தூப் கோன்ஸ்
தூபப்புகையானது சுற்றுப்புறச் சூழலை தூய்மைப்படுத்தும்

### பிருத்வி விபூதி
ஐச்வர்யத்தைப் பெருக்கும்.

### தன்ஷிகா ஹெர்பல் டூத் பவுடர்
பற்கள் மற்றும் ஈறுகளை காக்கும்.

### ஹிரண்மை ஹெர்பல் ஃபேஸ் பேக்
அழகையும் நிறத்தையும் காக்கும்.


### மஹி ஹெர்பல் சோப்
தோலை பாதுகாக்கும்.

### கஸ்யபி ஹெர்பல் ஷாம்பு
தலைமுடியைப் பாதுகாக்கும்.



தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்





**பெரிய நம்பிகள் வாழித்திருநாமம் உரை தொடர்ச்சி...**

**ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972**

(உம்பர்தொழும் அரங்கேசர்க்கு உகப்புடையோன்) உம்பர் – தேவர்கள், நித்யஸுரிகள். ***"வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி எதிர்திசை நிறைந்தனர்"*** என்பதற்குச்சேர "தேவர்களும்..... ஒருவர்க்கொருவர் முற்கோலி வந்து திரண்டு திருக்கண் நோக்கான தெற்கு திக்கிலே நிறைந்து நின்றார்கள்" என்றும், "அமரர்கள் புகுந்தனர் அடியிணை பணிவான்" என்கிறபடியே "அலங்கல் மாலைகளைக் கொண்டு தேவர்கள் அரங்கனுடைய திருவடி இணைகளில் பணிமாறுவதற்காக வந்து நின்றனர்" என்று தொண்டரடிப்பொடியாழ்வாரும், "உம்பர்கோனும் உலகேழும் வந்தீண்டி வணங்கும்" (பெரிய திருமொழி 5–4–5) என்று திருமங்கையாழ்வாரும் அருளியது காண்க.

(அரங்கேசர்க்கு உகப்புடையோனாவது) – அரங்கனாலே ஆட்கொள்ளப்பட்டவர். எவ்வாறு எனில் பெரியநம்பிகள் ஆளவந்தார் சீடரான மாறனேறி நம்பிக்கு இறுதிச்சடங்கு செய்ததனால் திருவரங்கத்தில் பெரும்பாலோர் அவரை எதிலும் சேரவிடாமல் தள்ளி வைத்திருந்தனர். திருவரங்கனுக்கு சித்திரை பிரம்மோற்சவத்தில் நடந்த திருத்தேரில் அரங்கன் எழுந்தருளும்போது பெரியநம்பிகள் திருமாளிகை வாசலில் தேர் புறப்படாமல் நின்றுவிட்டது. உடனே பெரிய நம்பிகளுக்கு அருளப்பாடிட்டு தீர்த்தம் பிரசாதம் முதலானவை கொடுத்து அவர் பெருமையை அனைவர்க்கும் உணர்த்திய பின்பே தேர் புறப்பட்டது என்ற வரலாற்றின் மூலமாக அரங்கன் உகப்புக்குப் பாத்திரமானவர் நம்பிகள் என்பதை அறியலாம்.

(ஓங்கு தனுக்கேட்டைதனில் உதித்த பிரான்) ஓங்கு – உயர்வு. தனுர் மாதமான மார்கழிக்கு உயர்வாவது வைஷ்ணவ மாதம். "மாதங்களுள் மார்கழியாக நான் இருக்கிறேன்" என்று கண்ணன் கீதையில் (ப.கீ.10–35) அருளியது காண்க. ஆண்டாள் திருப்பாவை பாடிய மாதம். "ஓங்கு" என்ற சொல் தனுசுக்கு அடைமொழியாகக்கொண்டு மாதங்களில் தனுர் மாதமான மார்கழி உயர்ந்த தானாப்போலே, "ஓங்கு" என்ற சொல் கேட்டை நக்ஷத்ரத்துக்கு அடையாகி நக்ஷத்ரங்களில் சிறந்ததாகும். வடமொழியில் "ஜ்யேஷ்டா" என்பது தமிழில் "கேட்டை" என்று வழங்கப்பட்டு பெரியது, உயர்ந்தது, முதன்மையானது என்ற பொருள்களைக் கொண்டது. "விப்ராணாம் ஜ்ஞாநதோச்ரேஷ்டம்" என்கிற படியே "பிராம்மணர்களுள் அறிவினால் சிறந்தவர்" என்கிறபடியே ஞானப்பெருமை உடையவரான பெரியநம்பிகள் உதித்த பெருமையைச் சொன்னபடி. "தநுர் ஜ்யேஷ்டாஸமுத்பூதம்" என்று திருநக்ஷத்ர தனியனில் அருளியபடியே மார்கழிக் கேட்டையில் அவதரித்தவர் பெரியநம்பிகள்.

மேலும் மார்கழி கேட்டையில் தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்த பெருமையும் உண்டு. மேலும் "பெரிய கோயிலையும் பெரிய பெருமாளை



யும் பேணிக்கொண்டு வருமவராய் லோககுருவுக்கும் குருவான மதிப்பையுடையவரான பெரியநம்பி அவதரித்தருளின உயர்த்தியும் உண்டல்லவா. மார்கழியில் கேட்டைக்கு" என்று உபதேச ரத்ன மாலை (பா.11) உரையில் பிள்ளை லோகம் சீயர் அருளியது காண்க. நமக்கு இராமாநுசனைத் தர்சன தலைவராக்கித் தந்து உதவியது பற்றி "பிரான்" என்றபடி. இதே நன்னாளில் கூரநாராயண ஜீயரும் அவதரித்தார். ஒரு ஆழ்வார், ஒரு ஆசார்யர் மற்றும் ஒரு ஜீயர் அவதரித்தமையால் இந்த நாளை முப்புரியூட்டும் நாளாகக் கொள்ளலாம்.

(வம்பவிழ்தார் வரதருரை வாழி செய்தான்)
வம்பவிழ் – பரிமளம் வீசுகின்ற, தார் – மாலை. வரதர் – அடியார்கள் வேண்டும் வரங்களை அளிப்பவர். காஞ்சியிலுள்ள இப்பெருமாளுக்குள்ள ஐந்து பெயர்களுள் "வரதர்" என்பதும் ஒன்று. ஸ்ரீமகா லக்ஷ்மியின் கொங்கைகளில் சாத்தின கஸ்தூரியின் பரிமளத்தினால் மாலை நறுமணம் கமழ்கின்ற மார்பையுடைய வரதர் என்பதால் "வம்பவிழ்தார் வரதர்" எனப்பட்டது. வரதர் திருக்கச்சி நம்பிகளிடம் இராமாநுசருக்காக உரைத்த சொல் ஆறு. அவற்றுள் ஆறாவது வார்த்தை – "பூர்ணாசார்ய ஸமாச்ரய:" என்கிறபடியே "ஆளவந்தார் சீடரான பெரியநம்பிகளைப் பற்ற (ஆசார்யராகக் கொள்ள) வேண்டும்" என்றபடி. இதற்கு ஏற்ப பெரியநம்பிகள் இராமாநுசருக்கு ஸமாச்ரயணம் செய்து ஆசார்ய ராய்த் திகழ்ந்து வாழவைத்தார். ஆகையாலே "வரதருரை வாழி செய்தான்" என்றவாறு.

(மாறனேரி நம்பிக்கு வாழ்வளித்தான்)
ஆளவந்தார் சீடர்களில் ஒருவர் மாறனேரி நம்பி. இவர் பாண்டிய தேசத்தில் நான்காம் வருணத்தில் புராந்தகம் என்னும் கிராமத்தில் அவதரித்தவர். ஆளவந்தாரிடம் மிக்க பக்தி கொண்டவராய், அவர் அன்புக்கு இலக்கானார். ஆளவந்தாருக்கு ஏற்பட்ட ராஜபிளவை என்னும் நோயை அவரிடம் வேண்டி ஆசார்யர் பிரசாதமாகப்பெற்று அவரைக் காத்தார்.

ஆளவந்தாரின் அருள்பெற்ற நம்பி தம்முடைய இறுதிக்காலத்தில் "ஆளவந்தார் அபிமானித்திருந்த இந்த சரீரத்தை புரோடாசத்தை (வேள்வித்தீயில் இடும் அரிசி மாவாலாகிய ஓமப்பொருள்) நாய்க் கிடுவது போலே விடாமல் அவைஷ்ணவர்களான தமது உறவினர்கள் ஈமச்சடங்கு செய்ய விடாதீர்" என்று பெரிய நம்பியை வேண்டினதாக குருபரம்பரா ப்ரபாவம் கூறும்.

அவ்வாறே மாறனேரி நம்பி திருநாட்டுக்கு எழுந்தருளின பின்பு பெரியநம்பிகள் நம்பியின் சரம திருமேனியைப் பிறர் கையில் காட்டிக்கொடாமல் தாமே பிரம்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்து பள்ளி படுத்தி இறுதிச்சடங்கு செய்து அவரை உய்வுபெறச் செய்தார். இதுதன்னையே ஆசார்ய இருதயத்தில் "மூவரில்... புரோடாசமாகச்செய்த புத்ரக்ருத்யமும்" (சூத்ரம் 85) என்று நாயனார் அருளியதற்கு ஏற்ப மாமுனிகள் பிரசித்தரான பெரிய திருமலைநம்பி, பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி ஆகிய மூவரும் ஆளவந்தார் சீடர்களாக இருப்பினும், ப்ரதாநரான பெரியநம்பி மாறனேரிநம்பிக்கு "புரோடாசத்தை நாய்க்கிடாதே கொள்ளும்" என்று அவர் அருளிச் செய்தபடியே புரோடாசமாக நினைத்து ஈமச்சடங்கு செய்ததைக் காட்டி உரைப்பர்.

ஸ்ரீவசனபூஷணத்திலும் (சூ.234) இந்த வரலாறு அமைந்துள்ளது காணலாம்.

தொடரும்....

அலசுவோம்......
அறிவோம்....
ஆதிகாவிய நாயகர்களை...

# கிருபாசாரியார்

- திரு. எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் வில்வித்தையையும், இதர போர்க்கலையும் கற்பித்தவர்கள் கிருபாசாரியாரும் துரோணாசாரியரும் ஆவர். இவ்விருவரும் மகாபாரதப் போரில் ஈடுபட்டாலும், அப்போரில் உயிர் துறக்காமல் பிழைத்தவர் கிருபாசாரியாரே.

கௌதம முனிவரின் மகனாகிய சரத்வான் என்பவர் சிறுவயதிலேயே வில்வித்தையில் சிறந்து விளங்கினார். ஒருசமயம் சரத்வான் கடும் தவத்தில் ஈடுபடத் தொடங்கினார். பெருந்தவம் புரிபவர்களால் தன்னுடைய இந்திரபதவிக்கு ஏதேனும் ஆபத்து நேருமோ என்ற கவலை வரும்பொழுதெல்லாம் அந்தத் தவத்தைக் கலைக்க முயற்சிப்பது தேவேந்திரனின் வழக்கம். தற்போது, சரத்வானின் நிஷ்டையைக் கலைப்பதற்காக தேவலோகத்து அப்சரஸ் ஒருத்தியை அனுப்பினான் தேவேந்திரன்.

நினைத்தது நடந்தது. சரத்வானுக்கும் அப்ஸரஸுக்கும் ஆணும் பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. தவத்தைத் தொடர விரும்பிய சரத்வான் தனக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளையும் வனத்தில் விட்டுவிட்டுச் சென்றார். அழகான அவ்விரு குழந்தைகளும் அவ்வனத்தில் உள்ள விலங்குகளால் மிகவும் அன்பாக வளர்க்கப்பட்டன.

சிறிது காலத்தில் வனத்திற்கு வேட்டையாடச் சென்ற சந்தனு மகாராஜா அவ்விரு குழந்தைகளைக் கண்டு அவகளிடம் அன்பும் கருணையும் கொண்டு அவர்களைத் தம்முடன் அழைத்துச் சென்று தமது அரண்மனையிலேயே வளர்த்து வந்தார். கருணை என்பதை வடமொழியில் கிருபை என்று கூறுவர். சந்தனு மகாராஜாவின் கருணையினால் அரண்மனைக்கு வந்த அவ்விரு குழந்தைகளும் கிருபன், கிருபி என்ற பெயர்களுடன் அழைக்கப்பட்டனர்.

சிலகாலம் கழித்துத் தம்முடைய தவ வலிமையால் தம்முடைய குழந்தைகள் இருக்குமிடத்தை அறிந்து சந்தனுவின் அரண்மனைக்கு வந்த சரத்வான் அவர்களை அள்ளியெடுத்துக் கொஞ்சியதுடன், கிருபனுக்கு வில்வித்தை நுணுக்கங்களையும் உபதேசித்துவிட்டு மீண்டும் தவம் செய்யச் சென்றார். கிருபன் வளர்ந்து கிருபாசாரியரானார். அவருடைய போர்த் திறமைகளை உணர்ந்த பிதாமகர் பீஷ்மர் பிற்காலத்தில் அவரையே பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆசிரியராக நியமித்தார். வில்வித்தையில் சிறந்தவராக அறியப்பட்ட மற்றோர் அந்தணராகிய துரோணாசாரியார், கிருபாசாரியாரின் சகோதரியாகிய கிருபியை மணந்து கொண்டார். அவர்களின் புதல்வனே சிரஞ்சீவி வரம் பெற்ற அஸ்வத்தாமன்.

கௌரவர்களின் ராஜகுருவாக விளங்கிய கிருபாசாரியாரை மகாரதி என்று அழைப்பர். அறுபதாயிரம் வீரர்கள் கொண்ட படையை எதிர்க்கக் கூடிய பெரும்வீரரை அதிரதி என்றும், பன்னிரண்டு அதிரதிகள் தலைமை தாங்கும் (அதாவது, 7,20,000 வீரர்களைக் கொண்ட) பெரும்படையுடன் போரிடக்கூடிய மாபெரும் வீரரை மகாரதி என்றும் அழைப்பார்கள். அத்தகைய மகாரதியாக விளங்கியவர் கிருபாசாரியார் ஆவார்.

ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் சங்கல்பத்தினால் பூபாரம் தீர்ப்பதற்காக நிகழ்ந்த மகாபாரதப் போரில், பாண்டவர்களின் படைகளை விடப் பெரிய படைகளையும், பீஷ்மர், துரோணாசாரியார் போன்ற மாவீரர்களையும் கொண்ட கௌரவர்கள் தரப்பு

பெரும் தோல்வியடைந்தது. கடைசி நாளில், பீமசேனனால் கதாயுதம் கொண்டு தொடை பிளக்கப்பட்ட நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றான் துரியோதனன். கௌர வர் தரப்பில் உயிர் பிழைத்த கிருபாசாரியார், அவருடைய மருமகனாக அஸ்வத்தாமன், கிருதவர்மா ஆகிய மூவரும் அவ்விடத்திற்கு வருகின்றனர். உயிருக்குப் போராடிக் கொண்டு இருக்கின்ற துரியோதனனைக் காணச் சகியாத அஸ்வத்தாமன் அன்று இரவுக்குள் பாண்டவர் களைக் கொன்று அவர்களின் தலைகளைக் கொண்டு வந்து காணிக்கையாக்குவதாகச் சபதம் செய்கிறான்.

பாண்டவர்கள் ஐவரும் தங்கள் பாசறையில் உறங்கும்போது வஞ்சகமாக அவர்களைக் கொல்வதே அஸ்வத்தாமனின் திட்டம் என்பதை அறிந்த கிருபாசாரியார் திகைக்கின்றார். முன்னர் துரியோதனனுக்குப் பலவாறு அறிவுரை கூறியவர், தற்பொழுது அஸ்வத்தாமனுக்கு அறத்தை எடுத்துரைக்கின்றார். “உறங்குபவர் களைக் கொல்வது க்ஷத்திரிய தர்மமல்ல” என்ற அவரது அறிவுரைக்கு அஸ்வத்தாமன் செவி சாய்க்கவில்லை. வேறு வழியின்றி, “வருவதை எதிர்கொள்வோம்” என்ற முடிவுடன் அஸ்வத்தா மனுடன் கிருபாசாரியார், கிருதவர்மா இருவரும் செல்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் அறிவுரைப்படி பாண்டவர்கள் அன்றிரவு பாசறையில் படுத்துறங்காமல், வேறிடத்திற்குச் சென்றுவிட்டனர். வெறி கொண்டவனாகப் பாசறைக்குள் புகுந்த அஸ்வத்தாமன் அங்கே இருந்த திருஷ்டத்யும்னன், சிகண்டி உள்ளிட்ட வீரர்கள் பலரையும் கொன்றதுடன், உள்ளே படுத்திருந்த ஐவருடைய தலைகளையும் வெட்டி எடுத்துக் கொண்டான். வெளிச்சமற்ற இரவில், அங்கே உறங்கியது பாண்டவர்கள் என்று எண்ணி, அவர்களுடைய ஐந்து புதல்வர்களை வீழ்த்தியதை அறிந்த துரியோதனனும் அஸ்வத்தாமனை வசைபாடிவிட்டு உயிர் துறந் தான். அஸ்வத்தாமனின் இத்தகைய கொடுஞ் செயலுக்குத் துணையாக இருந்ததை எண்ணிக் கிருபாசாரியார் தம்மையே மிகவும் நொந்துகொண்டார்.

செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்கு இருவேறு வழிகள் இருக்கின்றன. தங்களுக்குச் சோறிட்டு, உணவு, உடை, பதவி அனைத்தையும் வழங்கிய ஒருவன் அறநெறியிலிருந்து விலகிச் செல்லும்போது அறங்களை எடுத்துக் கூறி அவனை நல்வழிப்படுத்த முயற்சிப்பது ஒருவழி. அல்லது அத்தகையவனின் செயல்பாடுகளைத் தாங்கள் விரும்பாவிட்டாலும், நன்றிக்கடனாக அவனுடன் தொடர்ந்து பயணித்து, அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்வது மற்றொரு வழி.

இராமாயணத்தில் விபீஷணனும், மகாபாரதத்தில் விதுரரும் இவ்வாறு அறங்களை எடுத்துக் கூறியவர்கள் என்பதை அறிவோம். அதேசமயம் கும்பகர்ணன், பீஷ்மர், துரோணர், கிருபாசாரியார் போன்றவர்கள் செஞ் சோற்றுக் கடன் தீர்க்கத் தீமைக்குத் துணையாக இருந்த வர்களாவர். இவர்களுள் கும்பகர்ணன், பீஷ்மர், துரோணர் போன்றவர்கள் போரிட்டு வீரசுவர்க்கம் அடைந்து விட்டனர். ஆனால், உறங்கிக் கொண்டிருந்தவர்களைக் கோழைத்தனமாகக் கொன்று அதன் மூலம் துரியோதனனை மகிழ்விக்க எண்ணிய அஸ்வத்தாம னுக்குத் துணைபோனதால் கிருபாசாரியாருக்கு இகழ்ச்சியே எஞ்சியது.

ஆக, தீயவர்கள் தமக்குச் செய்த சில நன்மை களுக்காக அவர்களிடம் வரம்புமீறி நன்றி பாராட்டுவதும் தீமையையே விளைவிக்கும் என்பதற்குக் கிருபாசாரியா ரின் வரலாறே ஓர் உதாரணமாக விளங்குகின்றது,

அறத்தின் பக்கம் நிற்காவிடினும், அநியாயத்தை ஆதரிக்காமல் இருப்பதே அனைத்திலும் சிறந்தது என்பதே நம்முடைய இதிகாசங்கள் காட்டும் வழி என்பதை உணர்ந்து நாம் அனைவரும் என்றென்றும் நல்வழியில் நடப்போமாக!

தொடர்ந்து அலசுவோம்...

**பண்பாட்டு ஆடை**

- ➩ **திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.**
- ➩ **ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.**
- ➩ **பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்-சுடிதார்.**



# நான் கண்டு கொண்டேன்!

திரு.டி.டி.வரதராஜன்,
9791998950, சென்னை.

***************

"நீலன்" என்ற இயற்பெயரைப் பெற்ற திருமங்கை ஆழ்வார் சீர்காழிக்கு அருகிலுள்ள திருக்குறையலூர் என்ற ஊரில் கள்ளர் மரபில் அவதரித்தார். ஸம்ஸார சாகரத்தில் அழுந்திக் கிடந்து, கள்ளத் தொழிலில் ஈடுபட்டு, பலவாறான பாவங்களுக்கு ஆளாகி, அவதியுற்ற வேளையில், எம்பெருமான் வயலாளி மணவாளன், தம் நிர்ஹேதுகக் கிருபையாலே இவரைத் திருத்திப் பணிகொண்டு கடைத்தேற்றி இவருக்கு ரஹஸ்யத்ரயம் என்றழைக்கப்படும் ஒப்புயர்வற்ற மூன்று மந்திரங்களுள் முதலாவதாகத் திகழும் திருமந்திரம் என்ற ரஹஸ்ய மந்திரத்தை இவரது வலது செவியில் ஓதுவித்து புனிதராக்கினார்.

திருவெட்டெழுத்து மந்திரம் என்ற சிறப்புப் பெயர் பெற்ற இம்மந்திரத்தை நேரடியாக எம்பெருமானிடமிருந்து பெற்ற பக்தி அக்கணம் தெய்வீகப் புலமை பெற்ற கவியாகத் தேறி, 1084 பாசுரங்களைக் கொண்ட பெரிய திருமொழி என்ற திவ்யப் பிரபந்தத்தை அருளிச் செய்துள்ளார். இதில் ஆச்சரியப் படத்தக்க ஓர் விஷயமாவது, தம் பிரபந்தமான பெரிய திருமொழியில் முதல் பத்து பாசுரங்களிலேயே தாம் எம்பெருமானிடமிருந்து ஓதியுணர்ந்த ஆழ்வார், தாம் பெற்ற பேற்றினை இவ்வுலகத்தில் உள்ள அனைவரும் பெற வேண்டும் என்று விழைந்து வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. "வாடினேன்" என்று தொடங்கும் இத்திருப்பதிகத்தில் திருமந்திரத்தின் அர்த்த விசேஷத்தை ஆழ்வார் தெரிவித்துள்ளபடி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## "நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்"

கடந்து சென்ற காலமெல்லாம், வாழக்கிடந்தேன்; அதன் காரணமாக வருந்தியும் கிடந்தேன். துக்கம் நிறைந்த சம்ஸாரத்திலே பிறந்து அதில் ஊறினேன். பெண்கள் தரும் இன்பமே பேரின்பம் என்று கருதி, அறியாமையின் பெருக்கால் அவர்களை நாடி ஓடினேன். என்னைத் திருத்த எண்ணிய எம்பெருமானின் திருவருளால், எண்ணையும் அறியாமல் ஞான மார்க்கத்தில் அடி எடுத்து வைத்தேன். நன்மை தீமைகளை ஆராயத் தொடங்கினேன். "திரு அஷ்டாக்ஷரம்" என்னும் மஹாமந்திரத்தை அவனருளால் நான் கண்டு கொண்டேன் என்கிறார். இம்முதற்பாட்டில் "நாராயணா" என்னும் திருநாமமே நான் கண்டு கொண்டது என்று முடிக்கிறார்.

## பழுது போய் ஒழிந்தன நாள்கள்

"கடந்த என் காலங்கள், பெண்களின் சிற்றின்பத்திலேயே வீணாகக் கழிந்து போய்விட்டனவே. ஆனால் இன்றிலிருந்து என் வருங்காலங்கள் நீர்வளம் மிக்க, அன்னப்பறவைகள் பெடையோடு புணரும் இடமாயுள்ள திருக்குடந்தை எம்பெருமானைச் சேவித்து உய்வு பெறும்படியான அஷ்டாக்ஷர மந்திரத்தை என் நாவினால் சொல்லப் பெறும் பாக்யத்தை அடைந்தேன்" என மகிழ்கிறார்.

## ஊமை கண்ட கனவு போல்

நல்வினை ஏதும் செய்யாது தீவினையையே இதுகாறும் செய்து தெரிவைமார் (பெண்கள்) உருவத்திலே மதி மயங்கிக் கிடந்த நான், இன்று எம்பெருமானின் திருநாமமாகிய திருமந்திரத்தை நான் உய்யும் வண்ணம் கண்டு கொண்டேன். இது நாள் வரை ஊமை கண்ட கனவுபோல் வெளியே சொல்ல முடியாமல் இருந்தேன் என்கிறார் திருமங்கையாழ்வார். ஓடித்திரியும் நெஞ்சினைப் பெற்றிருந்தேன்; "வெற்றியையே விரும்பியும், அழியும் பொருட்கள் மீது அனாவசிய ஆசை கொண்டு தடுமாறிக்கிடந்த என்னை இன்று வராஹப் பெருமான் ஆட்கொண்டு விட்டான்."

*''ஏனத்துருவாய எம்பெருமானே''*வராஹப் பெருமான் அல்லது ஞானப் பிரான் ஆவார்.

*"எம்பெருமானின் சொத்தை எனதென்று களவாடினேன்"*

"என்னை இயக்கும் இந்த ஜீவாத்மா, சரீரம் உடைய எனக்குச் சொந்தமல்ல. பகவானுக்கே சொந்தமானது. அப்படியிருந்தும் ஏதோ எனக்குச் சொந்தமானது போல் எண்ணிக் களவு பூண்டிருந்தேன். ஆனால் இன்று நான் எம்பெருமானின் நிர்ஹேதுகக் கிருபையால் அருள் பெற்று திருமந்திரம் கற்று பரமபதத்தை அடைய சித்தமாய் இருக்கிறேன் என்று ஆனந்தம் கொள்கிறார் ஆழ்வார்.

''முக்காலத்தும் ஸ்ரீமந்நாராயணனையே அனுபவித்திருக்கும் அடியார்களே! அடியேனுக்குப் பல உதவிகள் செய்பவனும், தந்தையும் சுற்றத்தவனுமாய் இருப்பவனும் எம்பெருமான்தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். திருமந்திரமாகிற நாமத்தைச் சொல்லி அவனை வணங்குவேன்'' என்கிறார் இப்பாசுரத்தில்.

## கண்டவாறு தொண்டரைப் பாடாதீர்

*"இன்று செல்வராயிருப்போர் அன்று ஏழையரே"* என்பதை நீங்கள் அறியமாட்டீர். நீங்கள் அவர்களது குணம் பற்றியும் முற்றிலும் அறிய இயலாத நீங்கள் எதற்காக அவர்களை வேண்டுவன தரும் கற்பகம் என்று கவி பாடுகிறீர்கள்? இதனை விடுத்து குடந்தை எம்பெருமானான ஆராவமுதனை உண்மையாகக் கவிபாடி திருமந்திரத்தையும் ஓதி உஜ்ஜீவித்து இருங்கள்" என வேண்டுகிறார்.


நேற்று வரை சாத்திர நூல்களைக் கல்லாதவன்; புலனடக்கம் அறியாதவன்; நெஞ்சு செல்லுமிடம் எல்லாம் ஓடித்திரிந்தவன்; அறிவு கேடன் (முட்டாள் எனலாம்); இவ்வாறெல்லாம் இருந்த நான் இன்றோ! ஆஹா! சொல்லவே நா இனிக்கிறது. நல்வீடு பெறுவதற்கான நல்மந்திரமான நாராயண மந்திரத்தை அறிந்தவனாக இருக்கிறேன்; என்னே என்னுள் மாற்றம்!" என்று வியக்கிறார் பழைய நீலன்.

நாராயண மந்திரம் என்னென்ன தரும்? பட்டியலிடுகிறார் திருமங்கையாழ்வார்.

உயர்ந்ததான தொண்டக் குலத்தைத் தரும். சிறந்த ஐசுவர்யத்தைத் தந்திடும். அடியார்கள் துயரனைத்தையும் தரை மட்டமாக்கிடும். பரமபதம் / வைகுந்தம் ஆகிய பெருவீடு தரும். பகவானுடைய மஹா கிருபையைப் பெற்றுத்தரும். அவனுக்கு நிரந்தரக் கைங்கர்யம் செய்யும் பேற்றினை அளித்திடும்;

மேலும், அவனை அனுபவிப்பதற்கான வலிமையையும் தரும். பெற்ற தாயார் செய்யும் நன்மைகளைக் காட்டிலும் பன்மடங்கு நன்மைகளைத் தரும்.

இவ்வாறாகப் பலவிதமான அரிய நன்மைகளைக் கொடுக்கும் திருமந்திரத்தை அடியேன் கிடைக்கப்பெற்றேன் என்று புளகாங்கிதம் அடைகிறார் திருமங்கையாழ்வார். நீங்களும் சொல்லிப்பயன் பெறுங்கள் என்கிறார்.





# டிசம்பர் 2022
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.




மாதத்தின் முன் பகுதியில் வயிற்றுப்பகுதியில் உஷ்ணம் உண்டாகும். பின்பகுதியில் நல்ல ஆரோக்யம் உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. தொழில் வளர்ச்சி 16ஆம் தேதிக்குப்பின் நன்றாக அமையும். குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மனைவியின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.




தொழில் துறையிலோ, குடியிருக்கும் வீட்டடிலோ இடமாற்றம் செய்ய வேண்டியிருக்கும். தொழில் போட்டியில் வெற்றி நிச்சயம். குழந்தைகள் கல்விக்காக அதிகச் செலவினங்கள் ஆகும். தாய் தந்தையரின் ஆதரவு உண்டு. தொழில் அலைச்சலினால் தூக்கம் குறையும். மாணவர்கள் கவனமுடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும்.




தொழில் துறையில் நல்ல மாற்றமும் முன்னேற்றமும் உண்டு. ஆரோக்யத்தில் இழுந்த குறைபாடுகள் நீங்கும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. ஜீரண உறுப்பில் சிறு கோளாறுகள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். செலவுகளுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் இருந்த பல பிரச்சனைகள் குறையும்.




தெய்வ தலங்களுக்கு யாத்திரைகள் செய்து நல்ல தரிசனம் கிடைக்கப்பெறுவீர்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு இம்மாதம் கரு உற்பத்தியாகும். சகோதர வழியில் தனலாபம் உண்டு. குடும்பத்தில் மனைவியின் ஆதிக்கம் அதிகமானாலும் பிரச்சனைகள் எதுவும் இருக்காது. சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் கிடைக்கும்.




தொழில் துறையில் அலைச்சல் மிக அதிகமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். போட்டியில் வெற்றி உண்டு. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். இம்மாதம் கடன் வாங்குவதையும் கடன் கொடுப்பதையயும் முடிந்தவரை தவிர்க்கவும்.




குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். இளைய மூத்த சகோதரர்களுக்கு நன்மை உண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வார்கள். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் துறை நன்கு விருத்தி அடையும். மனைவி மூலம் தன லாபமும் நல்ல ஆலோசனையும் கிடைக்கும். தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தந்தையின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை.




தொழில் துறை விருத்திக்காக கடன் வாங்கும் சூழ்நிலை உண்டாகும். தந்தை மூலம் தனலாபம் உண்டு. இளைய மூத்த சகோதரர்களுக்கு நன்மை உண்டு. தாய் தந்தையரின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். முடிந்தவரை கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். மனைவியின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை.




தொழில் துறையில் எதிர்பார்த்த விருத்தி உண்டு. மனைவி மீது மிகுந்த அன்பைச் செலுத்துவீர். மனைவியால் தனலாபம் உண்டு. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. பூர்வபுண்ணிய சொத்துக்களைப் பெறுவீர்கள். தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். வேலை இல்லாதவர்களுக்கு இம்மாதம் வேலைக்கிடைக்கும்.




இம்மாதத்தின் முற்பகுதியில் செலவினங்களும் பிற்பகுதியில் தன வரவும் உண்டு. தொழிலில் போட்டி அதிகரிக்கும். ஆரோக்யத்தில் விருத்தி உண்டு. புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டு தொழில் துறையில் வெற்றி காண்பீர். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. குடும்பத்தில் விரைவில் சுபகாரியங்கள் நடக்கும். நல்ல யோகமான மாதம் இது.




பிடிவாதமாகக் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். மனைவி, குழந்தைகள் ஆரோக்யம் நன்றாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தோஷ பரிகாரங்களுக்கு ஏற்ற மாதம். புதிதாக வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு.




செலவினங்கள் மிக அதிமாக இருக்கும். வீட்டிலுள்ள மின்னனு, மின்சாரம் பொருட்களை மாற்ற வேண்டி இருக்கும். தொழில்துறையில் லாபமும் உண்டு. குழந்தைகளால் மனநிம்மதியும் உண்டு. தாய் வழிச்சொத்துக்கள் கிடைக்கும். தொழில் துறையில் நல்ல விருத்தியும் லாபமும் உண்டு. குழந்தைகளால் சந்தோஷமும் மனநிம்மதியும் உண்டு.




பிடிவாதமாகக் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். தெய்வ காரியங்களுக்குத் தலைமை தாங்குவீர்கள். தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றியும் தனலாபமும் கிடைக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. வெளிநாடு செல்லும் யோகம் உண்டு.

நீதிக் கதை

# தூய பக்தி



உருகி உருகி நான் பிரார்த்திக்கும் கடவுளிடம் ஒரு நாள் பேச சந்தர்ப்பம் கிடைத்தது.

மணி: கடவுளே நான் உங்க கிட்டே ஒரு விளக்கம் கேட்கலாமா?

கடவுள்: தாராளமாகக் கேள்

மணி: இன்னைக்கு ஏன் எனக்கு இப்படி ஒரு மோசமான நாளை கொடுத்தீங்க?

கடவுள்: என்னப்பா சொல்ற நீ?

மணி: எப்பவும் சரியா எழுந்திருக்கிற நான் இன்னைக்கு எழுந்திரிச்சதே தாமதமாகத் தான்.

கடவுள்: ஆமாம்! அவசரத்துல என்னை கூட கும்பிடாம அலுவலகத்திற்குப் புறப் பட்டாய்.

மணி: கிளம்பினதே தாமதமாகத்தான் இதுல என் பைக் வேற பஞ்சர் ஆகியிருந்தது.

கடவுள்: ஆமாம் எனக்கு தெரியும்.

மணி: சரி! பேருந்துல போகலாம்னு பேருந்தில் ஏறினால், வழியில் ஏதோ விபத்து போல ஒரே போக்குவரத்து நெரிசல். அலுவலகத் திற்கு ஒரு மணிநேரம் தாமதம்.

கடவுள்: ஆமாம்! தெரியும்.

மணி: மதியம் சாப்பிட கொஞ்சம் தாமதம் ஆகிடிச்சு. அதுக்குள்ள கேண்டீன்ல சாப்பாடு காலியாயிடுச்சு. கடைசியில் பசிக்கு ஏதோ கிடைச்சதை அரைகுறையா சாப்பிட்டுட்டு வந்தேன்.

கடவுள்: ஆமாம் அதுவும் தெரியும்.

மணி: வங்கியில் தனிநபர் கடனுக்கு விண்ணப்பம் பண்ணியிருந்தேன். அது விஷயமா ஒருத்தர் கிட்டே அலைபேசி எதிர்பார்த்திருந்தேன். மாலை வீட்டுக்கு திரும்பும்போது அவர் கிட்டேயிருந்து எனக்கு கால் வந்தது. பேட்டரியில் சார்ஜ் இல்லாம அலைபேசி அந்த நேரம் பார்த்து செயல்படவில்லை.

கடவுள்: ஆமாம் தெரியும்.

மணி: முட்டி மோதி வீட்டுக்கு வந்து கொஞ்ச நேரம் அறையில் ஏ.சி.யில உட்கார்ந்து டி.வி.யைப் பார்த்து ஓய்வு எடுக்கலாம்னா ஏ.சி. பழுதாகி வேலை செய்யல. இன்றைக்கு எனக்கு எதுவுமே சரி இல்லையே. ஒரு நாள் உங்களை கும்பிட மறந்ததுக்கு இவ்ளோ கஷ்டங்களா?

(கடவுள் பலமாக சிரிக்கிறார். சில வினாடிகள் கழித்து! பேச ஆரம்பிக்கிறார்)

கடவுள்: இன்றைக்கு உன் கர்மாவின்படி மிகவும் மோசமான நாள். நீ காலை அசந்து தூங்கிக்கிட்டிருக்கும்போதே மரணதேவன் உன்னை நோக்கி வந்துட்டான். அவன் கூட வாக்குவாதம் பண்ணி உன்னை காப்பாற்ற வேண்டி உன்னை கொஞ்சம் அதிக நேரம் தூங்க வைத்தேன்.

திரு. எம் அசோக் ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி, 97503 33265

***************




மணி: (அதிர்ச்சியுடன்) ஓ !

கடவுள்: உன் பைக்கை பஞ்சராக்கினேன். ஏனெனில்! நீ அலுவலகத்திற்குப் போகும் போது நீ போற வழியில் பிரேக் பிடிக்காமல் தாறுமாறா ஓடுற வேன் ஒன்று உன் மேல இடிக்கிறதாக இருந்தது. அந்த வேன் விபத்துதான் போக்குவரத்து நெரிசலுக்கு காரணம். நீ பைக்ல போயிருந்தா அந்த வேன் மரணதேவன் கணக்குப்படி உன் மேல இடிச்சிருக்கும்.

மணி: (அடக்கத்துடன்) ஓ !

கடவுள்: மதியம் உனக்கு சாப்பாடு கிடைக்காம போனதுக்கு காரணம் கடைசியாக மிச்சமிருந்த குழம்புல எலிக்கு வெச்சிருந்த எலி பாஷாணம் எப்படியோ தவறி விழுந்துடிச்சு! யாரும் அதை கவனிக்கல அதை நீ சாப்பிட்டிருந்தா என்னாவாகி இருக்கும்?

மணி: (கண்கலங்கியபடி) ம்ம்

கடவுள்: மாலை உன் அலைபேசி செயல்படாமல் போனதற்கு காரணம் அந்த நபர் உனக்கு தவறான வாக்குறுதிகள் கொடுத்து இக்கட்டில் மாட்டிவிட இருந்தார். எனவே அதிலிருந்து காப்பாற்ற வேண்டி உன் அலைபேசியை செயலிழக்கச் செய்து விட்டேன்.

மணி: ம்ம்

கடவுள்: அப்புறம் அந்த ஏ.சி. மின் கோளாறு ஏற்பட்டு அதில் முறையற்ற முறையில் மின்சாரம் வந்துகொண்டிருந்தது. ஒரு வேளை முகம் கழுவிக்கொண்டு ஈர கைகளுடன் எப்போதும் போல நீ சுவிட்சை தொட்டிருந்தால் அந்த கணமே தூக்கி எறியப்பட்டிருப்பாய். ஆகையால் அதை செயலிழக்கச் செய்தேன்.

என்னை வணங்க மறந்ததால் அன்று முழுதும் நீ சோதனையை சந்தித்தாய் என்று என்னை தவறாக நினைத்துக் கொண்டாய். ஆனால் அனுதினமும் நீ என்னை வணங்கி வந்த காரணத்தால் நீ என்னை மறந்த அன்றும் கூட நான் உன்னை காக்க மறக்கவில்லை.

மணி: இப்போது புரிகிறது இறைவா! என் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பும் அக்கறையும். இது புரியாமல் உங்களை மிகவும் நிந்தித்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.

கடவுள்: மன்னிப்பு கேட்காதே! என்னை நம்பு, எப்போதும் எந்த சூழ்நிலையிலும். அது போதும்!

மணி: நிச்சயமாக

கடவுள்: நீ திட்டமிடுவதை விட உனக்காக நான் திட்டமிடுவது எப்போதும் சரியாகவே இருக்கும்.

மணி: இனி நிச்சயம் உங்களை சந்தேகப்பட மாட்டேன். உங்கள் அருளை சந்தேகப்பட மாட்டேன். கண்ணை இமை காப்பது போல ஒவ்வொரு கணமும் நீங்கள் என்னை காப்பதை புரிந்துகொண்டேன்.

கடவுள்: என்னை நம்பியிருப்பவர்களை நான் என்றும் கைவிடுவதில்லை!

பல்சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...


பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



## பொருத்துக...

1. வைணவம் - அ. திருவெம்பாவை
2. சைவம் - ஆ. திருப்பாவை
3. மார்கழி - இ. திருப்பாணர்
4. திருப்பாவை - ஈ. தனுர் மாதம்
5. ஸ்ரீரங்கா - உ. திருபள்ளியெழுச்சி

1.ஆ, 2.அ, 3.ஈ, 4.உ, 5.இ.



## நன்மை அருளும் ஸ்ரீஆஞ்சநேய சுலோகம்

வாழ்வின் நன்மைகள் அருளும் இந்த ஆஞ்சநேயர் சுலோகத்தை தினமும் சொல்லி வந்தால் நன்மை உண்டாகும்.

*மனோஜவம் மாருத துல்ய வேகம்*
*ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்*
*வாதாத்மஜம் வானரயூத முக்யம்*
*ஸ்ரீராமதூதம் சிரஸா நமாமி*


## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

தர்மத்தின் இந்து பாராயணம் படி தினமும் "பகவத்கீதை"யை வேண்டும் செய்தல் அனைவரும்

இந்து தர்மத்தின்படி "பகவத்கீதை"யை அனைவரும் தினமும் பாராயணம் செய்தல் வேண்டும்

**பாதையைக் கண்டுபிடி**







திருப்பாவை என்ற அருமையான பாசுரத்தை நமக்கு அளித்த கோதா தேவிக்கு திருமாலை அடைய வழியைக் காட்டிடுங்கள்

## விடுகதை பகுதி...

1. பச்சை நிற அழகிக்கு உதட்டு சாயம் பூசா மலே வாய் சிவந்தது அவள் யார்?
2. பட்டு வண்ண சேலைக்காரி; நீல வண்ண ரவிக்கைக்காரி; அவள் யார்?
3. தன்னுள் காற்று நுழைந்ததும், காதுக்கு இனிமையான பாட்டிசைப்பான் அவன் யார்?

1.கிளி, 2.மயில் 3.புல்லாங்குழல்

# வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி
## போட்டி எண்-5



**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. தத்வகாஞ்சன விமானம் அமைந்திருக்கும் திவ்ய தேசம்..............................
2. மார்கழி கேட்டையில் அவதரித்த ஆழ்வார்..............................
3. மாறனேறி நம்பியின் ஆசாரியர்..............................
4. கௌதம முனிவரின் மகன் பெயர்..............................
5. சந்தனு மகாராஜா வளர்த்த இரு குழந்தைகளின் பெயர்..............................
6. அறுபதாயிரம் படைவீரர்களை எதிர்க்கும் வீரரை என்னவென்று கூறுவர்..............................
7. பாண்டவரை அழிக்க அஸ்வத்தாமனுடன் சென்றவர்..............................
8. திருவெட்டெழுத்து மந்திரம்..............................
9. 1084 பாசுரங்கள் கொண்ட பிரபந்தம்..............................
10. பகவத் கீதையில் உள்ள அத்தியாயங்களின் எண்ணிக்கை..............................
11. எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் எனப் பாசுரமிட்டவர்..............................
12. கண்டு கேட்டுற்று எனும் பாசுரம் உள்ள பிரபந்தம்..............................
13. ஜிதக்ரோத: என்பதன் பொருள்..............................
14. திருப்பாணாழ்வார் அவதரித்த திருநட்சத்திரம்..............................
15. சுக்ராசாரியார் பார்வை பெற்ற திருத்தலம்..............................






### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.12.2022.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

## இதில் பொருந்தாதது ஏது?



குறிப்பு : ஆண்டாள், பாகவதம், தனுர் மாதம், ஸ்ரீகிருஷ்ணர் இவர்களுக்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.

## இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்




1) சன்னல்
2) தாம்பூலம்
3) மேகம்
4) மயில்
5) சுவற்றில் சிறிய வண்ணம்
6) மான்
7) குடிலின்வாயிற் படி

# திருப்பாவை ஜீயர்

சித்திரக் கதை

கதை மூலம் :திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் :திரு. கே. துவாரக நாத்




இராமாநுஜர் சாமான்யர் அல்லர். மனதினையும் புத்தியினையும் ஒருநிலைப்படுத்தக் கூடியவர். உன்னை நீளா தேவியாக எண்ணியுள்ளார்.
வா சென்று பார்க்கலாம் அவருடைய மனநிலையை!
இருவரும் வாசலிற்கு வெளியே வந்தனர்.
இராமாநுஜா எழுந்திரு!
இராமாநுஜர் எழுந்து நின்றார். சீடனே! இவள் நீளா தேவி அல்ல. என் மகள் அத்துழாய். நீர் “உந்து மதகளிற்றன்...” பாசுரத்தில் மூழ்கி விட்டீர் போலும்.
நேரடியாக நீளாதேவி வந்தார் என்றே நினைத்தேன் ஆசார்யரே!
இராமாநுஜா இன்று முதல் நீர் திருப்பாவை ஜீயராகப் புகழப்படுவீர்.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:
இடம் :
நாள்: சந்தாதாரர் கையொப்பம்


திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
0877-
2233333
2277777


- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.


Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road, Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.




திருமலையில் கார்த்திகை தீபோத்ஸவம்
07-12-2022



திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
லக்ஷ வில்வார்ச்சனை
10-12-2022

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-11-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

